உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

e-magazine

www.aanmeegamalar.com

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

மலர்-5 இதழ்-147

விருப்ப சந்தா இதழ்

அக்டோபர்
1-15 2022



www.aanmeegamalar.com

e-magazine

www.aanmeegamalar.com

# இரண்டாவது சபரிமலை

# அற்புத பலன் தரும் சிவ மந்திரங்கள்

ஓம் ஜகங் என தினமும் 108 முறை ஜபித்தால் கணபதியின் அருள் கிட்டும்.

ஓம் நமசிவாய என்று ஜெபித்தால் காலனை வெல்லலாம்.

ஓம்நமசிவாய நமா என ஜெபித்தால் பூதக் கூட்டங்கள் வசமாகும். துஷ்ட தேவதைகள் அழியும். மன்னர்கள் அருள் கிடைக்கும்.

ஓம் நூரம் பயப்யுஞ் சிவாய நமா என்ற மந்திரத்தை ஜபித்தால் துன்பங்கள் விலகும்.ஆறு சாஸ்திரங்களையும், நான்கு வேதங்களையும் அறிய உதவும்.

சிவாய ஓம் என்று சொன்னால் திருமாலின் ஆற்றல் கிட்டும்.

மய நசிவ சுவாகா என ஓதினால் ஆகாயத் தில் பறந்து செல்லும் சித்தர்கள் கீழிறங்கிவந்து சுமனக்குளிகை தருவார்கள்.

இங் சிங் ச்ங் ஓம் என்ற ஈசான மந்திரத்தை தனக்கு ஆபத்தான வேளைகளில் சூரியனுக்கு எதிராக நின்று கைகளை மேலே உயர்த்தி ஜபிப்பவன் எல்லா பாவங்களிலிருந்து முழுமையாக நீங்குவான்.

சிங் சிங் சிவாய ஒ எனஜபித்துவந்தால் முக்காலமும் அறியும் ஆற்றல் உண்டாகும்.

ஓங்கிறியும் ஓம் நமச்சிவாய என சொன்னால் வியாபாரம் நன்றாக நடக்கும்.

லீங்கூஉம் சிவாய நம என ஜபித்தால் வசியம் உண்டாகும்.

சவ்வும் நமசிவாயநமா என ஜபித்தால் அரச போகம் கிட்டும்.

இவை யாவும் மந்திர ஜபம் பற்றி சித்தர்கள் கூறியிருப்பது.

# சமயபுரம் மாரியம்மன் தோன்றிய வரலாறு

வைணவி என்ற மாரியம்மன் சிலை ஸ்ரீரங்கத்தில் இருந்தது. அதன் உக்கிரம் தாங்க முடியாமல் போனதால் ஸ்ரீரங்கத்தில் இருந்த ஜீயர் சுவாமிகள் வைணவியை ஸ்ரீரங்கத்தில் இருந்து அப்புறப்படுத்த ஆணையிட்வைணவியின் விக்கிரகத் தை ஆட்கள் அப்புறப்படுத்துவதற்காக வடக்கு நோக்கி சென்று சற்று தூரத்தில் இளைப்பாறினார்கள். பிறகு மாரியம்மனின் சிலையை எடுத்துக்கொண்டு தென்மேற்காக வந்து கண்ணனூர் அரண்மனை மேட்டில் வைத்துவிட்டுச் சென்று விட்டார்கள்.



அப்போது காட்டு வழியாகச் சென்ற வழிப்போக்கர்கள் அச்சிலையைப் பார்த்து அதிசயப்பட்டார்கள். பின் அக்கம் பக்கத்தில் இருந்த கிரா மத்து மக்களைக் கூட்டிவந்து அதற்கு ‘கண்ணனூர் மாரியம்மன்” என்று பெயரிட்டு வழிபட்டனர்.

அக்காலத்தில் விஜயநகர மன்னர் தென்னாட்டின் மீது படையெடுத்து வரும்போது கண்ணனூரில் முகாமிட்டார்கள். அப்போது அரண்மனை மேட்டிலிருந்த கண்ணனூர் மாரியம்மனை வழிபட்டு தாங்கள் தென்னாட்டில் வெற்றி பெற்றால் அம்மனுக்கு கோவில் கட்டி வழிபடுவதாக வேண்டிக் கொண்டனர்.

அதன்படியே அவர்கள் வெற்றியும் கண்டார்கள். அம்மனுக்கு கோவிலையும் கட்டினார்கள்.

விஜயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தில் கி.பி. 1706ல் அம்மனுக்கு தனிக்கோவில் அமைத்தார்கள் என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் தோற்றுவிக்கப்பட்ட கண்ண னூர் மாரியம்மன் கோவில் இன்று "சமயபுரம் மாரியம்மன்" கோவிலாக மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகிறது.





# இரண்டாவது சபரிமலை

சபரிமலையில் வாசம் செய்யும் ஐயப்பன், கேரளாவில் இன்னொரு இடத்திலும் வாசம் செய்கிறார் என்பது பலரும் அறியாத தகவல்.

தனது களரி குருவிற்காக ஐயப்பன் தனது முக்கால் பங்கு சக்தியுடன் இன்னொரு இடத்தில் காட்சிதருவதால் இதை இரண்டாவது சபரிமலை என்றே கேரளத்தில் அழைக்கப்படுகிறது.

ஐயப்பன் தனது சிறு வயதில் களரி பயின்ற இடம் "ஆலப்புழா முகம்மா" எனும் பகுதியில் உள்ளது.

இந்த இடத்தில் களரி குரு சீரப்பன் என்பவரின் பரம்பரை இன்றும் வசித்து வருகிறது. பழமை மாறா வண்ணமாக அவர்களது வீடும் கோவிலும் உள்ளது.

கோவிலில் உத்திர திருநாள் முதல் துவங்கி மார்ச் 1-ந் தேதி வரை விழா நடைபெறும். விழாவின் போது ஆலங்காடு சங்கத்தின் மூலம் "திருவிளக்கு உற்சவம்" நடைபெறும்.

இக்கோவிலின் சிறப்பு சபரிமலை ஏறிசெல்ல முடியாமல் இருந்த குரு சீரப்பாவின் கனவில் ஐயப்பன் தோன்றி...

"உடல்நலம் சரியில்லாத நீங்கள் இனி சபரிமலைக்கு வரும் சிரமம் தீர வேம்பு நாட்டு அருவியில் ஒரு மரம் மிதக்கும். அந்த மரத்தைக் கொண்டு எனக்கு ஒரு கோவிலை கட்டி என்னை வணங்கி வாருங்கள். எனது முக்கால் பாகம் சக்தி இவ்விடத்தில் அருளாட்சி புரியும்" என்று கூறி மறைந்தார்.

கனவில் வந்தது போல் அருவியில் மிதந்துவந்த மரத்தைக் கொண்டு கோயில் எழுப்பி வணங்கி வந்தனர். ஐயப்பன் இங்கே வீராசனத்தில் அருள் பாளிக்கிறார்.

இவ்விடத்தில் தற்போது குரு சீரப்பன் பரம்பரையில் 10ம் தலைமுறை களரி கூடத்தையும் ஐயப்பன் கோவிலையும் பராமரித்து வருகின்றனர்.

மகரவிளக்கன்று உலகிலுள்ள அய்யப்பன் கோவில்களிலும் பூஜை நடைபெறும். ஆனால் இந்த கோவில் மட்டும் அன்று மூடப்பட்டிருக்கும்.

ஐயப்பனின் முக்கால் பாகம் இங்கு உள்ளதால், ஸ்வாமியின் முழு சக்தியும் சபரிமலையில் இருக்கவேண்டும் என்பதற்காக இக் கோயில் அடைக்கப்படுவது வழக்கமாக உள்ளது.

முக்கால் பாகம் சக்தி உறைகின்ற இடமாக ஐயப்பன் வாக்கு தந்த தலமிது.

ஸ்வாமியின் முக்கால் பங்கு சைதன்யம் இங்கே குடிக்கொண்டிருப்பதால் இக் கோவிலுக்கு "முக்கால் வட்டம் அய்யப்பன்" கோயில் என்று பெயர் ஏற்பட்டது. கேரளாவில் இத்திருக் கோவிலை இரண்டாவது சபரிமலை என்றே பக்தர்கள் அழைக்கின்றனர்.

நித்ய பூஜை செய்ய வசதி இல்லாததால் வாரத்தில் 2 நாட்கள் மட்டுமே நடைதிறந்து பூஜைகள் செய்யப்படுகிறது.

"பூழியங்கம்" என்ற வித்தையைக் கற்கும் கோலத்தில் ஐயப்ப ஸ்வாமி சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

இங்கே அய்யப்பன் கொடுத்து சென்ற வாளும், கச்சையும் பூஜை அறையில் உள்ளது...!

# தாழம்பூ பரிகாகரம் செய்தால் நினைத்ததை நிறைவேற்றிதரும்

# ஆஞ்சநேயர்

நினைத்த காரியம் நிறைவேற, ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு விதத்தில் பூஜை செய்து வேண்டிக் கொள்வது நடைமுறை, அந்த வகையில் அனுமனுக்கு ஒரு குறிப்பிட்ட மலரை வைத்து செய்யும் பூஜையால் பல்வேறு கோரிக்கைகள் நிறைவேறும்.

குறிப்பாக, எதிர்பார்க்கக் கூடிய விஷயங்கள் ஏதும் நடக்கவில்லை, ஒரு நல்லது கூட நமக்கு நடக்கவே மாட்டேங்குது, எல்லா கஷ்டமும் துன்பமும் ஒரு சேர வந்து துன்புறுத்துகிறது, குடும்பத்தில் இருக்கக்கூடிய கஷ்டத்திலிருந்து எப்படி வெளிவருவது என்று தெரியவில்லை, பணக்கஷ்டத்தை எப்படி சமாளிப்பது என்று தெரியவில்லை, வீண் மருத்துவ செலவு, கடன் தொல்லை, குழந்தைகள் சொல் பேச்சு கேட்கவில்லை, குடும்ப உறவுகளுக்குள் சண்டை, சொத்து பிரச்சனை, வீட்டில் சுபகாரியத்திற்கு தடை என்று பல்வேறு பிரச்சனைகளை சந்திப்பவர்கள் அனுமனுக்கு செய்யும் ஒரு பரிகாரத்தின் மூலம் மேற்கண்ட பிரச்சனைகளிலிருந்து விடுபெறலாம்.

செவ்வாய்க்கிழமை அல்லது சனிக்கிழமை ஏதாவது ஒரு நாளில், அனுமன் வீற்றிருக்கும் கோவிலுக்கு சென்று, அனுமனுக்கு தாழம்பூவை சாத்தி வழிபடவேண்டும்.

நாம் தேர்வு






செய்த கிழமையை விடாமல், தொடர்ந்து 11 வாரங்கள், அதே கிழமை யில் தாழம்பூவை சாத்தி வழிபட்டாலே பிரச்சனை களிலிருந்து விடுபடலாம்.

இதுபோன்று 11 வாரம் தொடர்ந்து தாழம்பூவை சாத்தி வழிபட்டவுடன் அனுமன் சன்னதி எதிரே அமர்ந்து, மேற்கண்ட பிரச்சனைகளில் எத னால் அதிகம் துன்பம் ஏற்படுகிறதோ, அந்த பிரச்சனை குறித்து மனதார கண்களை மூடி அனுமனிடம் கூறிவந்தால் மெல்ல மெல்ல அந்த பிரச்சனையின் தீவிரம் குறையத் துவங்கும்.

நாட்கள் ஆக ஆக அந்த பிரச்சனையே இல் லாமல் மறைந்து போகும்.

மேற்கொண்டு பிரச்சனைகள் வராமல் இருக்க வேண்டுமென்றால், ஆஞ்சநேயர் சன்னி தானத்திற்கு முன்பு அமர்ந்து 'ஜெய் ஸ்ரீ ராம்' என்ற மந்திரத்தை 108 முறை உச்சரியுங்கள் அதன் பின்பு ஆஞ்சநேயரை வலம் வந்துவிட்டு, நீங்கள் வீடு திரும்பி விடலாம்.

எங்கெல்லாம் ராம நாமம் சொல்லப்படுகிறதோ, அங்கெல்லாம் அந்த நாமத்தைக் கேட்பதற்காக அனுமன் விரைந்து வருவதாக புராணங்கள் சொல்கின்றன. அதோடு அனுமனை வழிபட் டால், சனி பகவானின் அனுக்கிரகமும் நமக்கு கிடைக்கும்.

சனி பகவானால் பிடிக்க முடியாதவர் களாக விநாயகப்பெருமானும், அனுமனும் மட்டுமே இருப்பதாக புராணக் கதைகள் கூறு கின்றன. அனுமனை வணங்கி வந்தால், சனி யின் கடுமையான பார்வையில் இருந்தும் விலக்கு கிடைக்கும்.

இதே போன்று, 11 வாரம் தாழம் பூவை அனுமனுக்கு சூட்டிய பின் "ஜெய் ஸ்ரீ ராம்" மந்திரத்தை உச்சரிப்பதால் அனுமன் மனம் மகிழ்வதாக கூறப்படுகிறது.

ஆஞ்சநேயருக்கு தாழம்பூ வாசம் மிகவும் பிடிக்கும். இந்த வாசம் வீசிக் கொண்டிருக்கும் போதே, அவருக்கு விருப்பமான "ஜெய் ஸ்ரீ ராம்" என்ற மந்திரத்தையும் கூறுவதால் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருக்கும் அனுமனிடம் நாம் வைக்கும் கோரிக்கையை உடனே ஏற்பதாக கூறப்படுகிறது.

இந்த எளிய வழிமுறைகளை, பெரும்பாலும் ஜோதிடர் கள் பரிகாரமாக கூறுவார்கள்.

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



# உடல் எடையை குறைத்து ஆரோக்கியத்தை கொடுக்கும் நவராத்திரி விரதம்

இந்து மதத்தில் அனைத்து பண்டிகைகளும், விழாக்களும் அறிவியல் காரணங்களுடன் தொடர்புடையவை. நவராத்திரியும் அப்படியே...

புரட்டாசி மாதம் அமாவாசை திதி தொடங்கி தசமி திதி வரை 10 நாட்கள் கோலாகலமாக நவ ராத்திரி பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது.

நவராத்திரி பண்டிகையை முதன் முதலில் ராமர்தான் கொண்டாடியதாக கூறப்படுகிறது. ராமபிரான் நவராத்திரி விரதத்தை கடைபிடித்த பிறகுதான் அவருக்குச் சீதை இருக்குமிடம் தெரிந்தது என்று கூறப்படுகிறது.

நவராத்திரி நாட்களில் பெண்கள் கன்யா பூஜை செய்வதால் சகலசெல்வங்களையும் பெறலாம். விஜயதசமி தினத்தன்று பெருமாள் கோவில்களில் வன்னி மரக்கிளையை வைத்து அதில் பெருமாளை எழுந்தருளச் செய்து பூஜை நடத்துவார்கள். இந்த வழிபாட்டில் கலந்து கொண்டால் கிரக தோஷங்கள் விலகி ஓடி விடும்.

10 நாட்களில்...

முதல் 3 நாட்கள் துர்காவையும்,

அடுத்த 3 நாட்கள் லட்சுமியையும்,

கடைசி 3 நாட்கள் சரஸ்வதியையும் போற்றி வழிபாடு செய்ய வேண்டும் என்பது ஐதிகம்.

துர்க்கையின் 9 அவதாரங்களையும் ஒவ்வொரு நாளும் போற்றி பக்தியுடன் மனமுருகி பிரார்த்தனை செய்திட வேண்டும்.

நவராத்திரி செப்டம்பர் அல்லது அக்டோபர் மாதத்தில் வருகிறது. இந்த காலம் தான் இலையுதிர்காலத்தில் இருந்து குளிர்காலத்திற்கு மாறும் நேரம். பருவநிலை மாற்றத்தின் காரணமாக, நமது உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறையும் காலம் இது. பொதுவாகவே குளிர் காலம் உடலின் நோய் எதிர்ப்பு செல்களையும்,

கொழுப்பின் கலவையையும் பாதிப்படைய செய்வதாக அறிவியல் விஞ்ஞானம் கூறுகிறது.

அந்த வகையில் இந்த மாதங்களில் பகல் குறைவாகவும் இரவு அதிகமாகவும் காணப்படும். இதனால் வடக்கு பகுதியில் குளிர் அதிகரிக்கும். இந்த குளிரால் மனித உடலில் மாற்றங்கள் ஏற்பட்டு நோய்களுக்கு காரணமாகி விடுகின்றன. அதிலிருந்து நம்மை தற்காத்துக் கொள்ளவே இந்த நவராத்திரி விரதங்கள்.

இந்து முறைப்படி தொடர்ந்து 9 நாட்களும் மக்கள் இடைவிடாத விரதத்தில் இருக்கிறார்கள். குளிர்காலத்தில் விரதம் இருப்பதால் உடலில் உள்ள கொழுப்புக்கள் எளிதாக கரையும். உடல் எடை குறைக்க போராடுபவர்கள் இந்த 9 நாள் விரதத்தை நிச்சயம் எடை குறைப்பிற்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

அத்துடன் விரதம் இருக்கும் காலகட்டத்தில் சாத்வீக உணவை உட்கொள்ள வேண்டும். தூய்மையான, இயற்கையான, உயிர்ப்பான, சுத்தமான, ஆற்றல் மிக்க உணவுகளை உட்கொள்ள வேண்டும். பழங்கள், தயிர், கல் உப்பு, பருவகால காய்கறிகள் மற்றும் மல்லி மற்றும் கருப்பு மிளகு இவைகளை சேர்த்துக் கொள்ளலாம்.

இந்த வகை உணவுகள் மனதிற்கு அமைதியான உணர்வுகளை வழங்குகின்றன. அத்துடன் உடலில் சூட்டை அதிகப்படுத்தும் வெங்காயம், பூண்டு போன்ற பொருட்களையும் தவிர்க்க வேண்டியது அவசியம். இதனால் செரிமான மண்டலம் சுத்தமாவதோடு உடலில் உள்ளநோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கிறது.

இந்த விரதம் கொழுப்பை குறைத்து குடலை சுத்தப்படுத்த உதவுகிறது. செரிமான மண்டலத்தை பலப்படுத்துகிறது.


ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்



# சிவ பூஜையும் நவராத்திரியும்

நவராத்திரி 9 நாட்களும் தினமும் பகலில் 1008 சிவ நாமாவளிகளை ஜெபித்து வழிபாட்டால் அளவிடற்கரிய பலன்கள் கிடைக்கும். நவராத்திரி நாட்களில் சுண்ணாம்பு மாவினால் கோலம் போடக்கூடாது. அரிசி மாவைப் பயன்படுத்திதான் கோலமிட வேண்டும். அவ்வாறு செய்வதால் குடும்ப ஒற்றுமையும், செல்வமும் வளரும். சுண்ணாம்பு மாவு பயன்படுத்தினாலோ, எதிர்மறையான விளைவுகளே உருவாகும். நவராத்திரி கோலத்தை செம்மண் கலந்து போட்டால் அம்பாள் மனமகிழ்ந்து வருவார் என்பது ஐதீகம்.

ஆன்மிகமலர்

நவராத்திரி 9 நாட்களும் வாசலில் மாவிலை கட்டி பூஜை செய்தால் ஐஸ்வர்யம் உண்டாகும். கொலு வைத்திருப்பவர்கள் அதன் முன் நவக்கிரக கோலம் போட்டால் அம்பாள் அனுக்கிரகமும், நவக்கிரகப் பலன்களும் கிடைக்கும்.

ஆன்மிகத் தகவல்களை
எளிமையாக, பாமரர்களும் புரிந்து
கொள்ளும் வகையில்
ஆன்மிகமலர்மெயில்
புத்தகத்தில் (e-book)
வெளியிட்டு வருகிறோம்...

eBook DOWNLOAD
eBook
DOWNLOAD
eBook DOWNLOAD
free

இதுவரை வெளிவந்த
145 க்கும் மேற்பட்ட
இதழ்களை

aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
படிக்கலாம்.





# தினமும் ஒரு மணிநேரம் இறந்து போங்கள்...

ஒரு நாள் உங்கள் உடல் கெட்டுப் போய்விடும். அந்த நாளிலும் நீங்கள் இறந்து போவீர்கள். ஆனால் அந்த நேரத்தில் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பம் நமது கைநழுவி போய் விட்டிருக்கும்.

ஆனால் இப்போதோ நமது உடல் இங்கேயே இருக்கிறது. நாமும் இன்னும் சுவாசித்து கொண்டுதான் இருக்கிறோம்.

ஆகவே இப்பவே இறந்து போகலாம்.

நாம் உயிரோடு இருக்கும் போதே இறப்பது என்பது ஒரு மிக புதிய அனுபவம்.

இது தைரியமிக்கவர்களுக்கு ஒரு சோதனை யாகவும் ஒரு பயிற்சியாகவும் ஒரு நல்ல அனுபவ மாகவும் இருக்கும்.

தினமும் நாம் இறந்து போகலாம். ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரத்தை இறப்பதற்காக ஒதுக்கி வைக்கலாம். நாள் ஒன்றுக்கு 23 மணி நேரம் வாழ்வது என்பதே போதுமானது. ஒரு நாளைக்கு ஒரு மணிநேரம் வெறுமனே நாம் இறப்பிற்கும் ஆழமாக போக வேண்டும்.

நமது உடல் உயிரற்று நாம் இறந்து போய் விட்டது போல் அங்கே கிடக்கலாம் அதை நாம் கண்காணித்து கொண்டே இருக்க வேண்டும். வெறுமனே ஒரு சாட்சியாக நாம் இருக்க வேண்டும். அப்போது என்ன நடந்தாலும் சரி நாம் செயல் புரிபவராக இருக்கக் கூடாது. இப்படி இருந்தால் நமக்கு மிகுந்த ஆச்சரியமாக இருக் கும்.

முதல் நாள் நமக்கு மிகுந்த கஷ்டமாக இருக்கும். ஏதோ ஒன்று எப்போதுமே நம்முடைய உடம்பில் நடப்பது போலவே இருக்கும். நம்முடைய கால்களில் குளிர் அடிப்பது போல் உணர்வோம். நமது வயிற்றில் வலி ஏற்படலாம் அல்லது நமது உடலின் ஏதோ ஒரு பகுதியில் எறும்பு ஊர்வது போல தோன்றும்.

ஆனால் நாம் அந்த எறும்பை தேடினால் அங்கு அது இருக்காது. நமக்கு ஆச்சரியமாக இருக்கும். ஏனென்றால் அவை அனைத்தும் நம்முடைய கற்பனையே! மனம் நம்மிடம் காட்டிய வித்தைகளே!

மனமானது ஆயிரத்தோர் காரணங்களை கொடுக்கும். நீங்கள் எழுந்து உங்களுடைய வேலைகளைப் பார்க்கத் தூண்டும். ஆனாலும் நீங்கள் ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் இறந்து போங்கள்.

போகப் போக உங்களுக்கு மனதின் தந்திரங்கள் புரிந்துவிடும். பிறகு அது உங்களை எழுந்து ஓடி, ஆட, வேலையில் மூழ்கிப் போக நெருக்கும் போது நீங்கள் அதனிடம் "நான் ஏற்கனவே இறந்து விட்டேன். நான் இப்போது என்ன செய்ய முடியும்?" என்று சொல்வீர்கள்.

பல நாட்கள் இதை பயிற்சி செய்துவந்தால், போகப் போக உங்களுடைய சுவாசத்தின் வேகம் குறைந்து கொண்டே போவதை நீங்கள் உணர்வீர்கள்.

நீங்கள் இந்த பயிற்சியை அதிகமாக மேற்கொள்ள, மேற்கொள்ள உங்களுடைய சுவாசம் வலுவிழந்து மேலும் வலுவிழந்து போகும். அப்போது ஒரு தருணம் வரும். உங்கள் சுவாசம் திடீரென முற்றிலுமாக நின்று போய் ஒரு பிணத்தை போல உங்கள் உடல் அங்கே கிடக்கும்.




மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்


அந்த தருணத்தில் முதல் முறையாக உங்களுக்கு நீங்கள் உங்கள் உடலில் இருந்து தனித்து இருப்பது தெரியவரும். "அமுது" என்றால் என்ன என்பதை அத்தருணத்தில் உணர்வீர்கள். .

ஞான பாதையின் சாராம்சம் இதுவாகவே, இதுவாக மட்டுமே இருக்க முடியும்.

அழியக்கூடியதையும் அழிவற்றதையும் தனித் தனியாக பிரித்து பார்க்க கூடிய தன்மையை அடைவதும் "நாம்" என்றால் என்ன? நம்முடைய உடல் என்றால் என்ன? என்பதை தெரிந்து கொள்வதும்தான்.



பிறகு, நீங்கள் மற்றவர்களை போல வாழ மாட்டீர்கள். உ ங் க ளு டை ய வாழ்க்கையானது ஒரு உன்னதமான நிலையை அடைந்து விட்டிருக்கும். நீங்கள் உள்ளே உயிர்ப்பு தன்மையுடனும், வெளியே ஒரு பிணத்தை போலவும் காணப்படுவீர்கள். இதுதான் உண்மையான ' சமாதி' நிலை. இப்போது நீங்கள் எதற்கும் பயப்பட மாட்டீர்கள்.

– ஓஷோ.....

# சனிபகவான் பிடியை போக்கும்

# நளதமயந்தி வரலாறு

ஆகுகன், ஆகுகி என்ற வேட தம்பதியர் காட்டிலுள்ள குகை ஒன்றில் வசித்தனர். அவ்வழியே வந்த துறவி ஒருவரை அவர்கள் உப சரித்தனர். இரவாகி விட்டதால், குகைக்குள் துறவியும், ஆகுகி யும் தங்கினர்.

அதில் இருவர் தான் தங்க முடியும் என்பதால் வேடன் வெளியில் தூங் கினான்.

தன் மனைவி ஒருஆணுடன் தங்கியிருக் கிறாள் என்ற எண்ணம் அவனுக்கு இல்லை. தன் மீது நம்பிக் கை வைத்த வேட னை முனிவர் பாராட்டினார். அயர்ந்து உறங் கிய வேடனை ஒரு மிருகம் கொன்று விட்டது. விஷய மறிந்த ஆகுகியும் உயிர் துறந் தாள்.



சுயநலமில்லாத இத்தம்பதியர் மறுபிறவியில் நள தமயந்தியாகப் பிறந்தனர். துறவி அன்ன பறவையாக பிறந்தார். நளன் நிடதநாட்டின் மன்ன ராக இருந்தான். ஒருநாள் அன்னப்பற வையைக் கண்டான்.

நளனின் அழகைக் கண்ட பறவை, “உனது அழகுக்கேற்றவள் விதர்ப்ப நாட்டு மன்னன் வீம னின் மகள் தமயந்தி தான். அவளை திருமணம் செய்து கொள். உனக்காக தூது சென்று வருகி றேன்” என்றது. அன்னத்தின் பேச் சைக் கேட்ட தமயந்தி காதல் கொண்டாள்.

இதனிடையே சனீவரர் உள் ளிட்ட தேவர்கள் தமயந்தியை விரும்பினர்.

அவளின் சுயம்வரத்தில் அனைவரும் பங்கேற்றனர். எல்லாருமே நளனைப் போல் உருமாறி வந்தனர். நிஜ நளனும் வந்திருந்தான்.

புத்திசாலியான தமயந்தி உண்மையான நளனுக்கே மாலையிட்டாள். அவர்களுக்கு

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!



இந்திரசேனன், இந்திரசேனை என்ற குழந்தைகள் பிறந்தனர்.

தமயந்தியை பெற முடியாத தேவர்கள், சனீஸ்வரரிடம், நளனைப் பிடிக்கும்படி கூறினர். கடமை உணர்வு மிக்கவர்களை சனீஸ்வரர் ஏதும் செய்ய மாட்டார். அதே நேரம், கடமையில் சிறு குற்றம் இருந்தாலும் பொறுக்க மாட்டார். நளனோ நல்லாட்சி செய்தான். இப்படிப்பட்ட ஒருவனை அவரால் பிடிக்க முடியவில்லை.

ஒரு முறை பூஜைக்கு தயாரான போது, சரியாகக் கால் கழுவவில்லை. "இதைக் கூட சரியாக செய்யாத மன்னன் நாட்டை எப்படி ஆளமுடியும்?" என கருதிய சனி, அவனைப் பிடித்து விட்டார்.

இதன் பின், புட்கரன் என்பவனிடம் சூதாடி பொன், பொருளை இழந்தான். குடும்பத்துடன் நாட்டை விட்டு வெளியேறினான். காட்டில் மனைவி, குழந்தைகள் படும் துன்பத்தைக் கண்ட நளன், ஒரு அந்தணர் மூலம் குழந்தை களை தன் மாமனார் வீட்டுக்கு அனுப்பினான்.

பின், மனைவியையும் பிரிந்தான். நடுக்காட்டில் தவித்த அவளை, ஒரு மலைப்பாம்பு சுற்றி யது. ஒரு வேடன் அவளைக் காப்பாற்றினான். ஆனால், அவள் மீது ஆசை கொண்டு விரட்டி னான். தப்பித்த அவள், சேதிநாட்டை அடைந்து பணிப்பெண்ணாக இருந்தாள். ஒரு வழியாக அவளை, தமயந்தியின் தந்தை கண்டுபிடித்து வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

தமயந்தியை பிரிந்த நளன், காட்டில் கார்கோடன் என்னும் பாம்பு கடித்து கருப்பாக மாறினான். அப்பாம்பு ஒரு அற்புத ஆடையை வழங்கிச் சென்றது.

அழகு இழந்த அவன், அயோத்தி மன்னன் மன்னன்ரிது பன்னனின் தேரோட்டியாக வேலை செய்தான். அவன் அங்கிருப்பதை அறிந்த தமயந்தி, நளனை வரவழைக்க தனக்கு மறுசுயம்வரம் நடப்பதாக அறிவித் தாள். ரிதுபன்னன் அதற்கு புறப்படவே, நளனும் வருத்தத்துடன் தேரோட்டியாக உடன் வந்தான்.

அப்போது, நளனைப் பிடித்த சனி நீங்கியது. தேரோட்டியாக இருந்த நளனையும், தமயந்தி அடையா ளம் கண்டாள். நளன், கார் கோடன்அளித்தஆடை யை அணிந்து தன் அழகான சுய உருவை மீண்டும் பெற்றான்.

திருநள்ளாறு தலத்தை அடைந்த போது, ஏழரைச்சனி நீங்கியது. சனீ ஸ்வரர் நளன் முன் தோன்றி, தன்னால் ஏற்பட்ட கஷ்டத்திற்குப் பரிகாரமாக வரம் தருவதாகக் கூறினார். "சனீஸ்வரரே! நான் பட்ட கஷ்டம் யாருக்கும் நேரக்கூடாது. என் மனைவிபட்ட துன்பம் எந்தப் பெண்ணுக்கும் ஏற்படக் கூடாது. என் கதையை படிப்பவர்களை துன்புறுத்தக் கூடாது" என வரம் கேட்டான். சனிபகவானும் அருள் புரிந்தார்.

கடமையைச் சரிவரச்செய்து, நளன் கதை படித்தால், சனி தோஷத்தில் இருந்து விடுபட்டு நல்வாழ்வு பெறலாம்.





# பரிகாரங்களில் சிறப்பு வாய்ந்தது ஹோமங்கள்

மக்களுக்கு நன்மை தரும் அனைத்தையும் இறைவனாகவும், தீமை தரும் அனைத்தையும் அரக்கர்களாகவும் உருவகப்படுத்தி வாழ்ந்தவர்கள்தான் நம் முன்னோர்கள். இன்னும் சொல்லப் போனால், தீமை தரும் விஷயத்திற்குள் உள்ள நன்மையையும் ஆராய்ந்து அதன் தேவையை சூசகமாக இறை வழிபாட்டிற்குள் புகுத்தி மக்கள் நல்வாழ்விற்கென வகுத்து வைத்துள்ளனர் நம் முன்னோர்கள்.

இதில் குறிப்பாக, இந்துக்களின் வழிபாட்டில் நெருப்பு ஒரு முக்கிய இடம் வகுக்கிறது. நெருப்பு மிகச் சுத்தமானது. மிக உக்கிரமானது. அதன்படி சுத்தமும், உக்கிரமும் சேர்ந்து கலந்த கலவையாக மனிதப்பிறவி இருக்க வேண்டும் என்பது முன்னோர்களின் எண்ணம்.

அநீதியைக் கண்டால் அழித்து ஒழிப்பது என்பது மனிதருக்குள் இருக்க வேண்டும்.

அதேநேரம் குற்றங்கள் புரியாத குற்றங்களிலிருந்து வெகுதூரம் தள்ளி இருக்கின்ற பரிசுத்தம் இருக்க வேண்டும். இந்த குணங்களைக் கொண்ட நெருப்பை வணங்குவது முன்னோர் வகுத்த வழி.

மேலும் நெருப்பு இடையறாது சலனமுள்ளது. ஆனால்சலனம் இல்லாதது போலத் தோன்றும். உற்று அந்தசலனத் தைக் கவனித்தால் அந்த ஆட்டத்தைப் பார்க்க நம்முடைய மனதிற்குள் உள்ள ஆட்டம் மெல்ல மெல்ல அடங்கும். நெருப்பை முன் வைத்து தியானிப்பது, நெருப்பை வளர்த்து அதனுள் மனதைச் செலுத்துவது என்பது மனதை கட்டுப்படுத்தக்கூடிய ஓர் அழகான பயிற்சி.

தேவர்கள், சித்தர்கள், ஞானிகள், யோகிகள் தொடங்கி நாடாளும் அரசர்கள் முதல் சரித்திர காலம் தொட்டு இன்றுவரை தங்கள் இஷ்ட காரியங்களை யாகத்தின் மூலமே பூர்த்தி செய்து கொண்டனர்.

ஹோமத்தில் தீயில் பயன்படுத்தும் மூலிகை பொருட்கள் தெய்வத்திற்கு உணவாகின்றன.

இந்த ஹோமத்தீயில் இடும் மூலிகைக்கு அபரிமிதமான சக்திகள் உள்ளன.

குறிப்பாக...

| | |
|---|---|
| புல்லுருவி | சர்வ வசியத்தையும், |
| தேள் கொடுக்கு | இராஜ வசியத்தையும், |
| செந்நாயுருவி | ஆண் வசியத்தையும், |
| நில ஊமத்தைப் | பெண் வசியத்தையும், |
| வெள்ளெருக்கு | சத்ரு வசியத்தையும், |
| சீந்தில் | தேவ வசியத்திற்கும் |

என்று இன்னும் பலப்பல மூலிகைகள் பல காரணங்களுக்குப் பயன்படுகிறது.

ஹோமத்தின் போது புனித நீரால் கும்பத்தை நிரப்பி, அலங்கரித்து உரிய தெய்வங்களை வேண்டி அதில் ஆவாஹனம் செய்து (வரவழைத்து), குத்து விளக்கில் அஷ்ட லட்சுமிகளை ஆவாஹனம் செய்து, ஹோமத்தீயில் தெய்வங்களை வசியம் செய்ய வேண்டும்.

பால், பழம்,தேன், மூலிகை சமித்துகளை ஹோமத்தில் தெய்வத்திற்கு





உணவாக கொடுத்து, உரிய மந்திரம் பிரயோகித்து நம் குறைகளை தேவைகளை இறைவனிடம் கூறும் போது நியாயமான தேவையாக இருந்தால் அதனை ஏற்று தேவை பூர்த்தி ஆகும்.

இந்த ஹோமத்திலும் பல்வேறு தெய்வங்களுக்கு தனித்தனியாக, ஒவ்வொரு காரணங்களுக்கு தனித்தனியாகவும் செய்யப்படுகிறது.

குறிப்பிட்ட பிரச்சனை அல்லது குறிப்பிட்ட தேவைக்கு, அதற்குரிய தெய்வங்களுக்கு ஹோமம் செய்தும் பலன் பெறலாம். அப்படி ஒருசில தெய்வங்களுக்கு செய்யும் ஹோமங்களும் அதன் பயன்களும்:

| | |
|---|---|
| கணபதி ஹோமம் | தடைகள் விலகும், எடுத்த காரியங்கள் வெற்றி அடையும். |
| சண்டி ஹோமம் | பயம் போக்கும், வாழ்வில் தொடர்ந்து வரும் தரித்திரம் நீக்கும். |
| நவகிரஹ ஹோமம் | கிரக தோஷங்கள் போக்கி மகிழ்ச்சியும், வளமும் உண்டாகும். |
| சுதர்ஸன ஹோமம் | ஏவல் பில்லி சூனியங்கள் நீங்கும், சகல காரியங்களிலும் வெற்றி தரும். |
| ருத்ர ஹோமம் | ஆயுள் விருத்தி உண்டாகும். |
| மிருத்யுஞ்ச ஹோமம் | மந்தி தோஷம் போக்கும், பிரேத சாபம் நீக்கும். |

| | |
|---|---|
| புத்திர கமோஷ்டி ஹோமம் | புத்திர பாக்கியத்தை உண்டாக்கும். |
| சுயம்வர கலா பார்வதி ஹோமம் | பெண்களுக்கு திருமண தடை நீக்கி விரைவில் நடைபெறும். |
| ஸ்ரீ காந்தர்வ ராஜ ஹோமம் | ஆண்களுக்கு திருமண தடை நீக்கி விரைவில் நடைபெறும். |
| லக்ஷ்மி குபேர ஹோமம் | செல்வ வளம் தரும், பொருளாதார பெருக்கம் ஏற்படும். |
| தில ஹோமம் | சனி தோஷம் போக்கும், இறந்தவர்களின் சாபங்களை நீக்கும். |
| ஸ்ரீ ப்ரத்யங்கிரா ஹோமம் | நோய்கள் நீங்கும், எதிரிகளின் தொல்லைகள் நீங்கும். |
| ஸ்ரீ பிரம்மஹத்தி ஹோமம் | எதிரிகளின் சூழ்ச்சிகள் தொல்லைகள் நீங்கி, வெற்றி மேல் வெற்றி உண்டாகும். |
| கண்திருஷ்டி ஹோமம் | திருஷ்டி தோஷங்கள் விலகும், காரிய தடைகள் நீக்கும். |
| கால சர்ப்ப ஹோமம் | திருமண தடை உத்தியோக தடை நீங்கும், வாழ்வில் சோதனைகள் நீங்கி சாதனைகள் மலரும். |

# சித்தர், யோகி நிலையே சதுரகிரியின் ரகசியம்



சதுரகிரியின் ரகசியம் என்று பார்த்தால், ஒருவன் சித்தர் மார்க்கத்தில் சித்தராகவும் மாறலாம். சித்தர் நிலை கடந்து யோகி நிலையையும் அடையலாம் என்பது சதுரகிரிமலையின் இரகசியமாகும்.

இந்த மலை பகுதியில் சித்த வித்தை குறிக்கும் இடங்கள் மற்றும் அட்சர உபதேசம் இடங்கள் பல உள்ளதாக கூறப்படுகிறது.

இன்னும் சொல்லப்போனால் இறைவன் மார்கத்தில் அல்லது சித்தர் மார்கத்தில் இன்னும் பல மார்க்கத்தில் செல்ல எண்ணுபவர்களுக்கு பல இடங்கள் இந்த மலையில் உள்ளது.

சதுரகிரி மலைபயணத்தின்போது சித்தன் அருள்கிடைக்க கடைபிடிக்கவேண்டிய நெறி முறைகள்

1 மாவூத்து குளத்தில் நீராடி அங்குஉள்ள உதயகிரிநாதரை வணங்கவேண்டும்.

2 குடும்ப பந்தத்தில் உள்ளவர்கள் கட்டாயம் காவி அணியக்கூடாது.

3 ஆண்கள் மேல்சட்டை அணிவதை தவிர்க்க வேண்டும். முடிந்தால் செருப்பு அணிவதை அனைவரும் தவிர்க்கவேண்டும்.

4 மலைபயணத்திற்க்கு ஐந்து நாட்குக்கு முன் மாமிசம் உண்பதை கட்டாயம் தவிர்க வேண்டும்.

5. இரவு அபிஷேகம் பார்த்து மனம்குளிர மூன்று மூர்த்திகளையும் தரிசனம் செய்து, மீண்டும் அதிகாலை மூன்று மூர்த்திகளையும் தரிசனம் செய்துவிட்டு, மாவூத்து குளத்தில் மீண்டும் குளித்து உதயகிரிநாதர், நந்தி, ஆஞ்சநேயர், சப்தகன்னிகள், அருகில் உள்ள சடாதாரி அம்மனையும் தரிசனம் செய்துவிட்டு இல்லம் திரும்ப வேண்டும்.

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஒர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
SML Graphics
Sree Maha Laksmi Graphics
செல்: +91-9444228203

# அகில உலகத்தை ஆளும்

# அன்னபூரணியும் தீபாவளி தரிசனமும்

தேவரும் முனிவரும் எப்போதும் தியானிக்கும் கயிலைவாசன், ஏகாந்தமாக தவத்தில் ஆழ்ந்திருந்த சமயம் பார்வதி தேவி விளையாட்டாக அவர் கண்களைப் பொத்தினாள்.

சூரிய, சந்திரர்களை வலது, இடது கண்களாகவும், அக்கினியையே நெற்றிக் கண்ணாகவும் கொண்டவர் சிவபெருமான். தேவி அவர் கண்களைப் பொத்தியதால் சூரிய, சந்திரர்கள் தம் ஒளியிழந்தனர். அதனால் உலகம் இருண்டது.

அனைத்து உயிர்களும் பரமேஸ்வரனை சரணடைந்தனர். அவர் தன் அக்கினிமயமான நெற்றிக் கண்ணைத் திறந்து உலகிற்கு ஒளியைத் தந்தார்.

இவை அனைத்தும் கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்ததால் பார்வதி தேவி பயந்து உடனே தன் கைகளை ஈசனின் கண்களிலிருந்து எடுத் தாள். கூடவே மனம் கலங்கி அவரிடம் "நான் விளை யாட்டாக தங்கள் கண்களை பொத்தியதால் ஏற் பட்ட பாவம் நீங்க என்ன பிராயச்சித்தம் செய்ய வேண்டும்?" எனக் கேட்டாள்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

"நமக்கு இது கண்ணிமைக்கும் நேரமே என்றாலும் உலக உயிர்களுக்கு அது எவ்வளவு காலம் என்று உனக்குத் தெரியாதா தேவி? ஏன் இந்த குறும்புத்தனம்? ஆனாலும் நீ உலகிற்கெல்லாம் அன்னை. ஆகவே உன்னை ஒரு பாவமும் அணு காது" என்றார் ஈசன்.

அந்த வார்த்தைகளால் சமாதானமடையாத அம்பிகை பூவுலகில் தவம் செய்து தன் மீது ஏற்பட்ட பாவத்திற்கு பிராயச்சித்தம் தேட முயன்றாள். ஈசனின் அனுமதி பெற்று தென்திசை நோக்கி புறப்பட்டாள்.

அந்த சமயம் காசி திருத்தலத்தில் மழையின்றி, கடும் பஞ்சம் நிலவியிருந்தது. மக்கள் பசியினால் துடித்தார்கள்.

தேவி காசியை அடைந்து அங்கு அற்புதமான ஒரு திருக்கோயிலை எழுப்பி அன்னபூரணி எனும் பெயரில் நிலைகொண்டாள். அவள் திருக்கரத் தில் என்றுமே வற்றாத அட்சய பாத்திரம் எனும் அமுதசுரபியும் பொன்னாலான கரண்டியும் இருந் தன. அவள் உயிர்களுக்கு உணவு வழங்க ஆரம்பித்தாள். அதனால் மக்களின் பசிப்பிணி நீங்கியது.

மக்கள் அன்னபூரணியை போற்றிப் புகழ்ந்தனர்.

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்





அவள் புகழ் திக்கெட்டும் பரவியது.

காசியில் கடும் பஞ்சம் நிலவிய வேளையில் அன்னபூரணி தேவி அனைவருக்கும் உணவளிக்கும் செய்தியை அறிந்த மன்னன், தேவியைச் சோதனை செய்ய எண்ணினான்.

தன் வீரர்களை அவளிடம் அனுப்பி சிறிதளவு தானியம் கடனாகப் பெற்று வர பணித்தான். அதன் படி அம்பிகையிடம் வந்த வீரர்கள் மன்னனின் ஆணையைத் தெரிவித்தார்கள். அதற்கு தேவி, "நான் தானியங்களைத் தர மாட்டேன். வேண்டுமென்றால் உங்கள் மன்னன் எப்போது வேண்டுமானாலும் இங்கு வந்து உணவருந்திச் செல்லலாம்" என்றாள்.

விவரம் தெரிந்து கொண்ட மன்னனும், அமைச்சரும் மாறுவேடம் பூண்டு அன்னபூரணி எழுந்தருளியிருந்த திருமாளிகைக்குச் சென்றனர். அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் உணவருந்த, மன்னனும், அமைச்சரும் மக்களோடு மக்களாய் அமர்ந்து சாப்பிட்டார்கள்.

தேவியின் திருக்கரத்தில் உள்ள தங்கப் பாத்திரத்திலிருந்து அள்ள அள்ளக் குறையாத உணவு வந்து கொண்டிருந்ததைக் கண்ட மன்னன், அவள் சாட்சாத் பராசக்தியே என்பதனை உணர்ந்தான். தேவியின் திருவடிகளைப் பணிந்தான்.

"தாயே என் அரண்மனைக்குஎழுந்தருளி அடியேனை ஆட்கொள்ள வேண்டும்" என்று கண்ணீர் மல்கக் கதறினான்.

மேலும் தேவி அங்கு எப்போதும் நிலைத்தருள வேண்டும் என்று வேண்டினான். அதன்படி தேவி தன் பக்தர்களைக் காத்து அருள்புரிந்து வருகிறாள். இதுவே தேவி அங்கு நிலைகொண்டதற்கான ஆதி காரணமாகக் கூறப்படுகிறது.



அழகுராஜா

அன்னபூரணி தரிசனம் தீபாவளிப் பண்டிகை யை ஒட்டிய மூன்று நாட்கள் மட்டுமே அன்னையின் தரிசனம் கிட்டும்.

முதல்நாள் தன திரயோதசி, அன்று பூஜைகள் இருந்தாலும் அன்னபூரணியை திரை போட்டு மறைத்திருப்பர்.

தீபாவளி தினத்தன்று ஐஸ்வர்யங்களை அள்ளி வழங்கும் அன்னபூரணி தேவிக்கு குபேர பூஜை நடைபெறும்.

அடுத்தநாள் லட்சுமிபூஜை.

இப்படி தீபாவளியை ஒட்டி மூன்று நாட்கள் விசேஷமாக பொன்னும் மணியும் நவரத்தினங்களும் கொண்டு செய்த அலங்காரங்களுடன் மணி மகுடம் அணிந்து தங்கக் கிண்ணமும், தங்கக் கரண்டியும் ஏந்தி இருக்கும் அன்னபூரணியை தரிசிக்கலாம்.

ஜகன்மாதா ஈசனுக்கு தங்கக் கரண்டியால் உணவளிக்க, இருபுறமும் தேவி, பூதேவியர் வீற்றிருக்க, பிட்சாண்டிக் கோலத்தில் விஸ்வநாதப் பெருமான் தேவியிடம் பிச்சை கேட்கும் அற்புதத் திருக்கோலத்தைக் காண இரு கண்கள் போதாது.

சுத்த தங்கத்தால் ஆன அன்னபூரணியின் திருவுருவம் கண்களைக் கூசச்செய்யும் ஒளியுடன் பிரகாசிக்கும்.

ஒரு ஆள் உயரத்தில் ஈசன், வெள்ளி விக்ரகமாக திருவோடு ஏந்தி அன்னபூரணியிடம் பிச்சை கேட்கும் பாவனையில் அலங்கரிக்கப்படுகிறார்.

நாகாபரணத்தை அணிந்து இடுப்பில் புலித் தோலுடன் ஒரு கையில் உடுக்கையும் மறுகையில் பிரம்ம கபாலமும் அவர் ஏந்தியிருக்கும் அழகே அழகு.

தீபாவளி நேரத்தில் அன்னபூரணி தேவி லட்டுத் தேரில் பவனி வருவது வழக்கம். பிறகு அந்த லட்டுகள் பக்தர்களுக்கு பிரசாதமாகத் தரப்படும் வைபவம் மிகவும் விமரிசையாக கொண்டாடப்படுகிறது.

அன்னபூரணி சந்நதிக்கு எதிரில் ஆதி சங்கர ரால் பதிக்கப்பட்ட சக்ர மேரு உள்ளது. பூஜைகள், லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை போன்றவை மேருவிற்கும் செய்யப்படுகின்றன.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

# 12 ராசிகளுக்கான பலன்கள்

# 2022 அக்டோபர்

## (01–10–22 முதல் 15–10–22 வரை)

## மேஷம் முதல் மீனம் வரை

குறிப்பு: ஒருவரது தசா புத்தியே 70% முதல் 75% வரையிலும், கோட்சாரம் 25% – 30% வரையும் பலனளிக்கும். ஆகவே இவை பொதுப்பலன்கள் என கொள்ளவேண்டும். ராசி, லக்கினம் இரண்டில் எது வலுவாக உள்ளதோ அதை பொறுத்தே பலன்கள் அமையும். பலன்களை ராசிப்படியும், லக்கினத்தை ராசியாக பாவித்தும் ஒப்பிட்டுப்பார்த்து நடைமுறையில் பொருந்தும் பலன்களை அறிந்து கொள்ளவும்.



ஜோதிட ஆலோசனைக்கு:
ஸ்ரீ வைத்தீஸ்வரன் அஸ்ட்ரோ ரிசர்ச் சென்டர்,
கிருஷ்ணகிரி.
கி.கார்த்திகேயன்.
செல்: 9538882623.

## மேஷம்:



ராசியில் ராகு பகவான் சுக்கிரன் சாரத்தில், ராசி நாதன் செவ்வாய் ராசிக்கு இரண்டில், பஞ்சமாதிபதி சூரியன் 6 இல் 3 மற்றும் 6 ஆம் அதிபதி புதனுடன், தன மற்றும் சப்தமாதிபதி சுக்கிரன் 6 இல், கர்மாதிபதி சனிபகவான் 10 இல் மற்றும் தன காரகன் குரு ராசிக்கு 12 இல், கேது 7 இல் தொழில், குடும்ப நிலை சீராக இருக்கும். பேச்சில் நிதானம் தேவை. சீருடை பணியாளர்கள் பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கப் பெறுவார்கள். இயந்திரம் மோட்டார் மற்றும் உற்பத்தித் துறை சார்ந்தவர்களுக்கு தொழில் மேம்பாடு ஏற்படும். இளைய சகோதரருக்கு வண்டி வாகனம் சார்ந்த விஷயங்களில் வீண் விரயம் ஏற்படும். துணைவரின் தம்பி தங்கைகளின் வீட்டிற்கு சென்று வருவீர்கள். அரசு பணி, அரசு சார்ந்த விஷயங்களில் அனுகூலமான நிலை உண்டாகும். தொழிலாளர்களுக்கு வக்கிர சனி பகவானால் தொழிலில் தேக்க நிலை ஏற்படும். வக்கிர நிவர்த்திக்கு பின் நிலைமை சீராகும். தந்தை வழியில் சிறிய மருத்துவ செலவு கள் அல்லது புண்ணிய காரியங்களுக்கு, புனித பயணங்களுக்கு செலவு செய்வீர்கள். துணைவரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சளி, ஜுரம் போன்ற தொந்தரவுகள் வந்து போகும். அத்தியாவசிய செலவுகளுக்கு கடன் வாங்க நேரிடும். ஆடம்பர அல்லது பிள்ளைகள் சார்ந்த தேவைகளுக்கு கடன் வாங்க நேரிடும். நிலம் மனை வாங்கும் வாய்ப்பு கூடி வரும். மாணவர்கள் சுற்றுலா, கேளிக்கைகளில் ஈடுபடுவர். இந்த ராசியை சேர்ந்த அரசியல் வாதிகள் ஆதாயம் அடைவார்கள். அக்டோபர் 9, 10 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது.

பரிகாரம்: கணபதி மற்றும் சித்தர் வழிபாடு. விலங்குகளுக்கு உணவளித்தல்.

## ரிஷபம்:



ராசியில் 7,12 உடைய செவ்வாய், ராசிநாதன் சுக்கிரன் ராசிக்கு 5 இல், 4 க்குடைய சூரியன் பஞ்சமாதிபதி புதனுடன் 5 இல், 6 இல் கேது குருவின் சாரம், 9 இல் பூரண யோகாதிபதி சனி பகவான், 11 இல் அஷ்டம மற்றும் லாபாதிபதி குரு, 12 இல் ராகு சுக்கிரன் சாரம். பதட்டம், பரபப்பு இருக்கும். நிதானம் தேவை. துணையில் வழியில் விரய செலவுகள் ஏற்படும். வீடு, மனை வாங்க வாய்ப்புகள் கூடிவரும். சகோதர வழி உறவுகளை சந்திப்பீர்கள். நீண்ட கால அபிலாஷைகள்

விருப்பங்கள் நிறைவேறும். அரசு வழி காரியங்கள் அனுகூலமாகும். திருமணத்திற்கு காத்திருப்போருக்கு திருமண காலம் கூடிவரும். குடும்பத்தில் புதிய உறுப்பினர் வரவு உண்டு. குடும்ப உறுப்பினர்களிடம் வீண் வாக்கு வாதம் விவாதங்களை தவிர்க்கவேண்டும். பெண்களுக்கு வயிறு சம்பந்த 8 ஆம் பாவம் சார்ந்த கரக விஷயத்தில் மருத்துவ செலவுகள் ஏற்படும். பண விஷயத்தில் எச்சரிக்கை தேவை, வேலைக்காகவோ, நிலம் வீடு சம்பந்தமாக விவகாரங்களில் முன்பணம் கொடுப்பதை 15 நாட்களுக்கு தள்ளிப்போடவும். கடன், ஜாமீன் கையெழுத்து போடுவதை தவிர்ப்பது நல்லது. பிள்ளைகள் படிப்பில் முன்னேற்றம் உண்டு. அவர்களுக்காக எதிர்கால திட்டங்களுக்கான செலவுகள் உண்டு. மூத்த சகோதர வழியில் பொருள் பண உதவிகள் கிடைக்கும். தொழிலாளர்கள், பணியாளர்கள் நிலை சுமாராக இருக்கும். அரசியல் வாதிகள் ஆதாயம் அடைவர். 10, 11 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.

பரிகாரம்: ஆஞ்சநேயர் மற்றும் தட்சிணா மூர்த்தி வழிபாடு. கோவில் யானைக்கு உணவளித்தல்.

## மிதுனம்:



ராசியாதிபதி புதன் கேந்திரத்தில் சூரியனுடன், 5, 12 க்குடைய யோகாதிபதி சுக்கிரன் 4 இல், 6 மற்றும் 11 குடைய செவ்வாய் 12 இல், பாதகாதிபதி குரு ராசிக்கு 10 இல், அஷ்டம மற்றும் தர்மாதிபதி சனிபகவான் 8 இல், ராகு சுக்கிரன் சாரத்தில் 11 இல், கேது குருவின் சாரத்தில் 5 இல், கணவன் மனைவி குடும்ப சூழ்நிலை சீராக இருக்கும். அரசு வழி ஆதாயங்கள் உண்டு. அரசு வேலைக்கு முயற்சிப்போருக்கு அனுகூலமுண்டு. ஆடம்பர பொருட்கள் வண்டி வாகனம் வாங்க திட்டம் தீட்டுவீர்கள் வருங்காலத்தில் ஆசை ஈடேறும். பிரயாணத்திலும் வண்டி வாகனம், இயந்திரங்கள் இயக்கும் போதும் நிதானத்தை கடைபிடிக்க வேண்டும். தன விஷயங்களில் தடை தாமதம் உண்டாகும். பிள்ளைகளின் மேற்படிப்பிற்காக, வேலைக்காக கடன் வாங்குவீர்கள். உறவினர்கள் வருகை உண்டு. தந்தை வழி உறவுகளால் திடீர் ஆதாயம், அனுகூலம் உண்டாகும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாயார் நலனில் அக்கறை தேவை. மாணவர்கள் படிப்பில் மட்டுமே கவனத்தை செலுத்த வேண்டும். இடையூறுகளை தவிர்க்க வேண்டும். பணியாளர்கள், தொழிலாளர்கள் பணியிடத்தில் வேலைப்பளு மற்றும் சிரமத்திற்கு ஆளாகலாம். பொறுமையை கையாள வேண்டும். வியாபாரிகள் தொழில் நிலை சீராக செல்லும். அதிக கடன் விற்பனையை தவிர்க்க வேண்டும். கலைத்துறையினர் பிரகாசிப்பார்கள் ஆதாயம் அடைவார்கள். அரசியல் வாதிகள் பதவி, ஆதாயம் அடைவர். புதிய முயற்சிகளை 4, 5 தேதிகளில் தவிர்க்கவும்.

பரிகாரம்: விநாயகர் வழிபாடு. எறும்புக்கு புற்றுக்கு அரிசியிடல்.

## கடகம்:



வார தொடக்கத்தில் இருந்த குழப்பநிலை வார மத்தியில் தெளிவடையும். 3 இல் பாதகாதிபதி சுக்கிரன், தனாதிபதி சூரியன் 3 இல் 3, 12 க்குடைய புதனுடன், 4 இல் கேது குரு சாரத்தில், 7, 8 குடைய சனிபகவான் 7 இல், 6, 9 க்குடைய குரு 9 இல், ராகு பகவான் 10 இல் சந்திரன் சாரம். 11 இல் யோகாதிபதி செவ்வாய். நீண்டகால திட்டங்கள் நிறைவேறும். குடும்ப நிலவரம் திருப்திகரமாக இருக்கும். பேச்சில் கடுமையை குறைக்கவேண்டும். பிள்ளைகளை விரும்பிய படிப்பில் சேர்ப்பீர்கள். பொறியியல் துறைகளை தேர்ந்தெடுப்பார்கள். தேவையற்ற மனக்குழப்பம் வந்து போகும். சிறு சிறு உடல் உபாதைகள் வந்து போகும். 5, 6 தேதிகளில் வாழ்க்கை துணையுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படும். வீண் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. தொழில் கூட்டாளிகளிடம் அல்லது வாடிக்கையாளர்களிடம் பண விஷயத்தில் கவனம் தேவை. கடன் வாங்கவோ கொடுக்கவோ வேண்டாம். சிலருக்கு மருத்துவ செலவுகள் உண்டு. பெரியோர்களின் ஆசியால் பெரிய அளவில் தொல்லைகள் இல்லாமல் கடந்து வருவீர்கள். சீருடை பணியாளர்கள் சிறப்புறுவர். எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டாகும். உல்லாச பயணங்கள் உண்டாகும். பூர்வீக அல்லது சொந்த ஊருக்கு சென்று வருவீர்கள். வீடு, வாகன வகையில் செய்யவேண்டிய காரியங்கள் தடைபடும். மாணவர்கள் உற்சங்கமாக விளங்குவார்கள். தொழிலாளர் பணியாளர், வியாபாரிகள் நிலை உயரும். அரசியல் வாதிகள் பெண்களால் சிக்கல்களை சந்திப்பர். 7, 8 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.

பரிகாரம்: சனிபகவான் வழிபாடு. காக்கைக்கு உணவளித்தல்.

## சிம்மம்:



ராசியாதிபதி சூரியன் ராசிக்கு இரண்டில் புதனுடன் புத ஆதித்ய யோகத்தில், ராசிக்கு 2 இல் 3, 10 குடைய சுக்கிரன், 3 இல் கேது பாதகாதிபதி குருவின் சாரம், 6 இல் 6, 7 குடைய சனி பகவான் 8 இல் பாதகாதிபதி குரு, 9 இல் பாதக ஸ்தானத்தில் ராகுசுக்கிரன் சாரத்தில், 10 இல் யோகாதிபதி செவ்வாய் செல் வாக்கு சொல்வாக்கு கூடும். தொழில், குடும்ப நிலவரம் சுமாராக இருக்கும். பத்திரிக்கை, மீடியா, கம்யூனிகேஷன் துறையை சேர்ந்தவர்கள் ஆதாயம் அடைவர். நீண்ட கால கனவுகள் ஈடேறும். தர்ம கர்மாதிபதி யோகத்தில் மற்றும் புத ஆதித்ய யோக சேர்க்கையில் கோட்சாரம் அமைவதால். பூர்வ புண்ணிய பலனாக எதிர் பாராத ஆதாயம் அரசு, தந்தை, தொழில் வகை யில் பலருக்கு கிடைக்கும். பொன் பொருள், அழகு சாதன பொருட்களுக்காக செலவு செல்வீர்கள். நீண்டகால முதலீடுகள், வைப்பு நிதி, இன்சூரன்ஸ் போன்றவற்றில் திட்டமிட்டு பயன டைவீர்கள். தைரிய குறைவு, ஆன்மீக ஈடுபாடு, சித்தர்கள் வழிபாடு மேற்கொள்வீர்கள். தாயார் தந்தையாரிடையே மனத்தாங்கல் உண்டாகலாம். தாயார் வழியில் ஆதாயம் அடைவீர்கள். குலதெய்வ கோயிலுக்கு சென்று வருவீர்கள். பெரியோர்கள், மகான்களின் தரிசனம் ஏற்படும். சிலருக்கு நிலபுலன் சேர்க்கை உண்டு. அதன் பொருட்டு கடன்கள் உண்டாகும். ஆரோக்கியம் சீராக இருக்காது ஜனவரிக்கு பிறகு சரியாகும். சிலர் சிறுதூர விமான பயணங்களை மேற்கொள் வர். தொழிலாளர், பணியாளர் எதிர்பார்த்தஆதரவு கிடைக்கும். பணிச்சுமையும் இருக்கும். வியாபாரி கள் கடன்களை வசூலிக்க அல்லல் படுவர்.

பரிகாரம்: ஆஞ்சநேயர் வழிபாடு. வயதானவர்களுக்கு, பெரியோர்களுக்கு உதவி.

## கன்னி:



ராசியில் ராசியாதிபதி புதன் 12 குடைய சூரியனுடன் சேர்க்கை. இரண்டில் கேது குருவின் சாரத்தில், 5, 6 குடைய சனிபகவான் 5 இல், 7 இல் 4, 7 குடைய பாதகாதிபதி குரு பகவான். 8 இல் ராகு யோகாதிபதி சுக்கிரன் சாரத்தில், 3, 8 குடைய செவ்வாய் 9 இல், ராசியில் ரீயோகாதிபதி சுக்கிரன். உற்சாகம் கூடும். குடும்ப நிலவரம் சுமாராக இருக்கும். அனாவசிய ஆடம்பர தேவைகளை தவிர்க்கவும். தேவையற்ற கடன்களில் தள்ளிவிடும். சிலருக்கு கண்களில் தொந்தரவு உண்டாகலாம். பிரயாணத்தில் கவனம் தேவை. கை , தோள் பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டு அதனால் பண விரயம் மருத்துவ செலவுகள் உண்டாகலாம். வீட்டை புனரமைப்பீர்கள். நீண்டகால முதலீடுகளை விற்று ஆதாயம் அடைவீர்கள். இலாபம் உண்டு. சிலருக்கு பூர்வீக சொத்தில் பங்கு கிடைக்கும். சுக சௌகரிய தேவைகளுக்கு குறைவிராது. கணவர் மனைவி புரிந்து நடந்து கொள்வர். உறவுகளின் தலையீடு இருக்கும். வாக்கு வாதம் வேண்டாம். தந்தை வழியில் சிலருக்கு மருத்துவ செலவுகள் உண்டாகலாம். வியாபாரிகள், தொழில் கூட்டாளிகள் நல்ல லாபம், ஆதாயம் அடைவர். பணியாளர்கள் மேலதிகாரிகளால் சிரமத்திற்கு ஆளாவர். பொறுமை முக்கியம். மாணவர்களுக்கு படிப்பில் மந்த நிலை நீடிக்கும். கவனத்தோடு இருக்க வேண்டும். அரசியல் வாதிகளுக்கு எதிர்பார்த்த பதவி ஆதாயம் கிடைக்கும். 7, 8 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்ப்பது நல்லது.

பரிகாரம்: விநாயகர் வழிபாடு, கோவில் யானைக்கு பழம் அளித்தல். உயரம் குறைந்தவர்களுக்கு உதவி.

## துலாம்:



ராசியில் கேது குருவின் சாரத்தில், ராசியாதிபதி சுக்கிரன் ராசிக்கு 12 இல் விரய ஸ்தானத்தில், 4, 5க்குரிய யோகாதிபதி சனி பகவான் 4 இல், 6 இல் 3, 6 குடைய குரு பகவான், 7 இல் ராகு பகவான் சுக்கிரன் சாரத்தில், 2, 7 குடைய செவ்வாய் 8 இல் மறைவு, 12 இல் 9, 12 குடைய புதனுடன் பாதகாதிபதி சூரியன் குடும்பத்தை பிரிந்து இருக்க நேரலாம். பணி நிமித்தமாகவோ அல்லது வேறு காரணங்களால் அல்லது தினமும் ஊரைவிட்டு சென்று வருவீர்கள். தேவையில்லாத அனாவசிய கடன்கள் உண்டாகும். ஆடம்பர, வண்டி வாகன வகையில் செலவுகள் உண்டு. தந்தையாருக்கு மருத்துவ செலவுகள் ஏற்படலாம் அல்லது தந்தை வழியில் பண விரயம் உண்டாகலாம். இளைய சகோதரத்தின் வகையில் இலாபம் ஆதரவு உண்டு. நிலம், பூமி சேர்க்கை உண்டு. தொழில் விருத்தி, எதிர்கால நலன்களை கருத்தில் கொண்டு கடன் வாங்க

நேரலாம். எதற்க்காக கடன் வாங்குகிறீர்களோ அதற்காக மட்டுமே பயன்படுத்தவும். அனாவசிய விரயம் ஏற்படும் வாய்ப்புகள் உண்டு. பொன், வெள்ளி, பாண்டு பாத்திரங்களில் நீண்ட கால முதலீடுகளை திட்டமிடுவீர்கள். பணியாளர்கள், தொழிலாளர்கள் நிலை சுமாராக செல்லும். வியா பாரிகள், கூட்டாளிகள் விவகாரங்களில் தடை தாமதங்களை சந்திக்க நேரிடும். மாணவர்கள் கடினமாக உழைக்க வேண்டும். .அரசியல்வாதிகள் அனுகூல மற்ற நிலைகளை சந்திப்பார்கள். 9, 10 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்..

பரிகாரம்: சுப்பிரமணியர், விநாயகர் வழிபாடு, இளையவர்களுக்கு உதவி.

## விருச்சிகம்:



ராசியாதிபதி செவ்வாய் ராசிக்கு 7 இல் இருந்து பார்வை, 2, 5 குடைய குரு பகவான் 5 இல் இருந்து ராசியை பார்க்கிறார், 3, 4 குடைய சனிபகவான் 3 இல், 6 இல் ராகு பகவான் 7, 12 குடைய சுக்கிரன் சாரத்தில், 9 இ ல் யோகாதிபதி சந்திரன் அவரே பாதகாகிபதியும் ஆகிறார். களத்திர மற்றும் விரயாதிபதி சுக்கிரன் 11 இல் உடன் 8, 11 குடைய புதனுடன் 10 ஆம் அதிபதி சூரியன், 12இல் குருவின் சாரத்தில் கேது பகவான் உற்சாகம் கூடும், தொழில், குடும்ப நிலைமை சிறப்பாக இருக்கும். வாக்கில் கடுமையை தவிர்க்க வேண்டும். புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்வீர்கள். பெரியோர், குலதெய்வ அனுக்கிரகம் ஏற்படும். சிலர் குலதெய்வ கோவிலுக்கு சென்று வருவார்கள். பணியாளர்கள், தொழிலாளர்கள் பணி நிமித்தம் வெளியூரில் வேலை பார்க்க அல்லது போய் வர வேண்டியது இருக்கலாம். பிள்ளைகளுக்கு மூத்தோரின் உதவி கிடைக்கும். வயதான பெரியவர்கள் வீட்டில் இருந்தால் மருத்துவ செலவுகள் உண்டாகலாம். வீடு, வண்டி, சுக, சௌகரியங்கள் கெடும். தடை தாமதம் உண்டாகும். ஏற்கனவே செய்து வைத் திருந்த டெபாசிட், காப்புநிதி, பொன், பாண்டு, போன்றவை மெச்சூரிட்டி அடையும் அதனால் இலாபம் கிடைக்கும். பழைய சொத்துக்கள் மூலம் லாபமடைவீர்கள். வியாபாரிகள் நல்ல இலாபம் கிடைக்கப்பெறுவர். அரசியல் வாதிகள் எதிர்பாராத ஆதாயம் உண்டு. 7 ,8 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.

பரிகாரம்: விநாயகர், தட்சிணாமூர்த்தி வழிபாடு. ஏழை பிராமணர், தர்ம, ஆன்மீக காரியங்களுக்கு உதவி.

## தனுசு:



ராசிக்கு கேந்திரத்தில் ராசியாதிபதி குரு தன் சுய வீட்டில், இரண்டில் 2,3 க்குரிய சனி பகவான், 5 இல் ராகு பகவான் சுக்கிரன் சாரத்தில், 6 இல் 5 மற்றும் 12 கூறிய செவ்வாய், 10 இல் 6, 11 க்குரிய சுக்கிரன், 10 இல் பாதகாதிபதி உச்ச புதனுடன் யோகாதிபதி சூரியன், 11 இல் கேது குருவின் சாரத்தில் சுக சௌகரியங்கள் கூடும் வீடு, வண்டி வாகன சேர்க்கை உண்டு. மஞ்சள் நிற வண்ணத்தில் வீடு, வாகன சேர்க்கை. அதற்கான கடன்கள் ஏற்படும். தாய் மாமன் உறவுகள் வகையில் சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள் அதன் மூலம் சுப விரைய செலவுகள் உண்டு.தொழில் குடும்பம் சீராக இருக்கும். பேச்சில் நிதானம் இருக்கும். திட்ட மிட்ட பயணங்கள் தடைபட்டு மற்றொரு நாளில் நடைபெறும். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். சிலருக்கு வயிற்றுப்பகுதி சம்பந் தப்பட்ட இடங்களில் உபாதைகள் வரலாம். சகோதர வகையில் உதவிகள் ஆதாயம் உண டாகும். தந்தையிடம் மனக்கசப்பு உண்டா கலாம் நீண்ட கால புதலீடுகள் பலனளிக்கும். துணைவரின் பணியிடத்தில் ஆதாயம் அடை வார். மேலதிகாரிகளின் ஆதரவு உண்டு. பணி யாளர்கள், தொழிலாளர்கள் நிலை சிறப்புறும். வியாபாரிகள் பேராசையின்றி தொழில் செய்ய சிறப்பு. மாணவர்கள் கேளிக்கை பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வர். அரசியல் வாதி கள் சில பிரச்சனைகளை எதிர்கொள்வார்கள். 14, 15 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.

பரிகாரம்: சுப்பிரமணியர் வழிபாடு, ஸ்ரீ வெங்கடேச பெருமாள் வழிபாடு, ஆடு, கோழி, கால்நடைகளுக்கு உணவளித்தல்.

## மகரம்:



ராசியாதிபதி சனி ராசியில், ஜென்ம சனி. 12, 3 குடைய குரு 3 இல், 4 இல் சுக்கிரன் சாரம் பெற்ற ராகு பகவான். 4, 11குடைய செவ்வாய் 5 இல், 7 இல் சந்திரன், 9 இல் 5, 10 க்குரிய யோகாதிபதி சுக்கிரன், 9 இல் 6, 10 குரிய புதனுடன் 8 ஆம் அதிபதி சூரியன், 10 இல் கேது குருவின் சாரத்தில் மனக்குழப்பம், மந்தம், நிதானம், தெளிவற்ற நிலை நீடிக்கும். தொழில் குடும்ப விவகாரங்கள் தாமதப்படும். கோவில் குளம் என்று புனித யாத்திரை சென்று வருவீர்கள்.

களத்திரத்தின் உடல் நலனில் கவனம் தேவை. தொழில், வியாபாரம் மந்தமாக இருக்கும். நிதி நிலை சீராக இருக்கும். நீண்டகால முதலீடுகள் பலனளிக்கும். நீண்டகால ஆசைகள் பூர்த்தியாகும். மூத்தவர்களின் ஆசைகளை பூர்த்தி செய்வீர்கள். தொழில்முறை பயணங்கள் ஏற்படும். கடன் கொடுப்பது, வாங்குவது இரண்டையும் தவிக்கவும். தந்தை வழி உறவுகளிடம் மனக்கசப்பு ஏற்படும். பிள்ளைகள் பேச்சை கேட்க மாட்டார்கள். பொறுமையுடன் நடந்து கொள்ளவும். அடுத்த மாதம் நிலைமை சீராகும். வரவுக்கும் செலவுக்கும் சரியாக இருக்கும். தொழிலாளர்கள், பணியாளர்கள் உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காமல் போகலாம். பணியிடத்தில் வயதில் இளையவர்கள் மூலம் சிலருக்கு தொந்தரவுகள், இடைஞ்சல்கள் உண்டாகலாம், இரும்பு, எலெக்ட்ரிகல், இயந்திரம், கட்டிடம் போன்ற துறைகளை சேர்ந்த வியாபாரிகள் சிறப்படைவர். அரசியல் வாதிகள் பெயர் கெடும். 7, 8 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும்.

பரிகாரம்: ஸ்ரீ விஷ்ணு, ஸ்ரீ மஹாலக்ஷ்மி வழிபாடு, சுமங்கலி மற்றும் பள்ளி செல்லும் மாணவர்களுக்கு உதவி.

## கும்பம்:



ராசியாதிபதி சனி பகவான் ராசிக்கு 12 இல் ஏழரை சனி நடப்பில் உள்ளது. 11, 2 குடைய இலாப மற்றும் தன காரகன் குரு பகவான் 2 இல். 3 இல் ராகு பாதக மற்றும் யோகாதிபதி சுக்கிரன் சாரத்தில், 4 இல் 3, 10 க்குரிய செவ்வாய், 6 இல் சந்திரன், 8 இல் 4, 9 குடைய சுக்கிரன், 8 இல் 5, 8 குடைய புதன் 7 ஆம் அதிபதி சூரியனுடன் 8 இல், 9 இல் கேது குருவின் சாரத்தில் வீண் விரயங்கள், தடை தாமதங்கள் ஏற்படும். சிலருக்கு உடல் உபாதைகள் கால், மூட்டு சம்பந்தமான தொந்தரவுகள் ஏற்படும். தொழில், குடும்ப நிலை சீராக இருக்கும். நிதிநிலை மேம்படும். சுப செலவுகளுக்காக கடன்கள் ஏற்படும். பிள்ளைகள் மற்றும் துணைவரிடத்தில் சுமூக நிலை இருக்காது. பொறுமையாக இருக்க வேண்டும். புனித யாத்திரை உண்டு. பணி நிமித்தமாக பயணங்கள் மேற்கொள்வீர்கள். பணியாளர்கள் தொழிலாளர்கள் ஆதாயம் அடைவர். மன மகிழ்ச்சியான சம்பவங்கள் நடைபெறும். துணைவரின் பணியிடத்தில் நற்பெயர், பதவி, ஊதிய உயர்வுகள் கிடைக்கும். ஆடம்பர பொருட்கள் சேரும். தவணை முறையில் அல்லது சீட்டு மூலம் பொன் பொருள் சேர்க்கை உண்டு. தாயாரின் நலனில் கவனம் தேவை. மனைவியின் வழியில் உதவிகள் ஆதரவுகள் உண்டாகும். உறவினர் களை சந்திப்பீர்கள். சுப நிகழ்ச்சிகள் உண்டாகும். தந்தையாரிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். மாணவர்கள் பயணங்களில் கவனமாக இருக்க வேண்டும். அரசியல் வாதிகள் தடை தாமதங்களை எதிர்கொள்வர். புதிய முயற்சிகளை 7, 8 தேதிகளில் தவிர்ப்பது நல்லது.

பரிகாரம்: ஸ்ரீ சத்ய நாராயணர், வெங்கடேஸ்வரர் வழிபாடு. பௌர்ணமி பூஜை, மாணவர்களுக்கு உதவி.

## மீனம்



ராசியாதிபதி குரு ராசியில், இரண்டில் 3, 8 குடைய சுக்கிரன் சாரம் பெற்ற ராகு. 3 இல் 2, 9 குடைய செவ்வாய், 5 இல் யோகாதிபதி சந்திரன், 7 இல் 3, 8 குடைய சுக்கிரன், 7 இல் 4, 7 குடைய பாதகாதிபதி புதனுடன் 6 குடைய சூரியன், 8 இல் குருவின் சாரம் பெற்ற கேது குருவின் அருளால் ஏற்கனவே அனுபவித்து வந்த கஷ்டங்களில் இருந்து வக்கிர சனியின் மகர சஞ்சாரத்தால் ஆதாயம் உண்டு. ஆரோக்கியம் மேம்படும். தொழில், குடும்ப நிலவரம் சுமாராக இருக்கும். சகோதர ஆதரவு பரஸ்பரம் உண்டாகும். பிள்ளைகள் எதிர்பார்த்த படி நடந்து கொள்வார்கள். தாயாரின் ஆதரவு கிடைக்கும். துணைவர் புரிந்துகொண்டு செயல்படுவர். சிலருக்கு இரண்டாம் குழந்தை பிறக்கும். திருமணத்திற்கு காத்திருப்போருக்கு காலம் கனியும். வேலைக்கு காத்திருப்போர் உரிய வேலை கிடைக்கும். பொறியியல், இயந்திர துறையை சேர்ந்த பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் சீருடை பணியாளர்கள் நிலை மேம்படும். வியாபாரிகள் சிறிது மந்த நிலையில் வியாபாரம் இருக்கும். தொழில் விருத்திக்காக கடன்கள் வாங்குவீர்கள். பொன் பொருள் சேர்க்கைக்காக சுப செலவுகள் கடன்கள் உண்டாகும். இளைய சகோதரதிற்கு உடல் உபாதைகள், கோளறுகள் ஏற்படலாம். அரசியல் வாதிகள் பதவி, ஆதாயம் அடைவார்கள். 6, 7 தேதிகளில் புதிய முயற்சிகளை தவிர்க்கவும். 13, 14 தேதிகளில் மகிழ்ச்சியான செய்திகள் கிடைக்கும்.

பரிகாரம்: விநாயகர், ஆஞ்சநேயர் வழிபாடு, தர்ம மற்றும் ஆன்மீக காரியங்களுக்கு உதவு. ஏழை மாணவர்களுக்கு உதவி.

மாதம் தோறும் 2 புத்தகங்கள்




ஆன்மிக e-magazine

படியுங்கள் இலவசமாக

aanmeegamalar.com

ஆன்மிகமலர்.காம்



# கடவுளுடைய சரீரமாக உலகம் இருக்கிறது

பிரம்மம் ஒன்றே சாத்தியமானது மற்ற அனைத்தும் பொய்யானது என்று சொல்கின்ற அத்வைதிகள் பிரம்மத்திடம் உள்ள சித்தையும் அசித்தையும் ஒத்துக்கொள்வது இல்லை பிரம்மன் எப்படி சத்யமான பொருளோ அதே போலவே கண்ணுக்கு தெரிகிற உலகமும் சத்தியமானது தான் என்று சொல்லுகின்ற துவைதிகளும் சேதன அசேதன பொருள்களுக்கும் பிரம்மத்திற் கும் காக்கப்படும் காத்து நிற்கும் தொடர்பை தவிர ஐக்கியம் என்ற ஒரு நிலைபாட்டை ஏற்றுக்கொள்வது கிடையாது அதாவது அவர்களும் பிரம்மத்தில் சித்தும் அசித்தும் விசேஷ தன்மையாக இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்வது கிடையாது

விசிஷ்டாத்வைத தத்துவமோ பிரம்மத்தையும் ஒத்துக்கொள்கிறது உலகத்தையும் ஒத்துக்கொள்கிறது அதே நேரம் பிரம்மத்தில் உலக பொருள்கள் அனைத்தும் நிறைந்துள்ளது என்பதையும் அதாவது ஐக்கிய பாவத்தையும் ஒத்துக்கொள்கிறது இந்த தன்மையை சரீர சரீரி சம்மந்தம் என்று அழைக்கிறது அதாவது சரீர சரீரி சம்மந்தம் என்றால் ஆத்மாவும் சரீரமும் வெவ்வேறானவை ஆனால் ஒற்றுமையால் ஒன்று போல் தெரிவதனால் ஒன்று தான் என்று உலக வழக்கில் பேசப்படுகிறது அல்லவா? அதே போலவே உலகத்தோடு ஒட்டாமல் பிரம்மம் தனியாக இருந்தாலும் அது உலகத்தை தன்னக்குள் வைத்திருப்பதனால் இரண்டும் ஒன்று போலவே தெரிகிறது என்பது இதன் மைய கருத்தாகும்.

**கடவுள் உருவாக்கிய மதம்**

வேதங்களில் எவனுக்கு பூமி சரீரமோ? எவனுக்கு ஆத்மா சரீரமோ? எவன் ஆத்மாவில் உறைகிறானோ? என்ற வார்த்தைகள் பல இடங்களில் வருகின்றன இவைகள் கடகசுருதிகள் என்று அழைக்கப்படும் கடகம் என்றால் சேர்ப்பது என்பது பொருள் இத்தகைய பொருள்களே பகவான் இடத்தில் உலகத்துக்கு உள்ள சேர்மானத்தை காட்டுவதாகும் உயிர், ஜடம், ஈஸ்வரன் ஆகிய மூன்று தத்துவங்களையும் தனித்தனியாக பார்த்தால் பேதம் தெரியும் அசேதனமாகிய அறிவற்ற உடல் வேறு அதனுள் மறைந்திருக்கும் சேதன பொருளாகிய அறிவு வேறு அந்த

அறிவுக்குள் மறைந்திருக்கும் பரம சேதனன் என்ற பரம்பொருள் வேறு என்று சாஸ்திரங்கள் பேத உணர்சிகளை விவரித்து கூறுகின்றன பல உறுப்புகள் ஒன்றிணைந்த கூட்டு வடிவமான உடம்பில் கை, கால், காது, மூக்கு போன்றவற்றை தனித்தனியாக பார்க்கும் போது பேத உணர்வும் ஒன்றாக ஒரே உடம்பாக பார்க்கும் போது அபேத உணர்வும் ஏற்படுகிறது.

உதாரணமாக ராமசாமி மெலிந்திருக்கிறான். சங்கரன் பருத்திருக்கிறான் என்ற இரண்டு வார்த்தையை எடுத்துக்கொள்வோம் இதில் ராமசாமி, சங்கரன் ஆகிய பெயர்கள் நிச்சயம் உடம்பை மட்டுமே குறிக்கிறது என்பது நமக்கு தெரியும். அதே போலவே ராமசாமி அறிவாளி சங்கரன் புத்திசாலி என்று சொல்லும் போது இந்த இரண்டு பெயர்களும் உடம்பை குறிக்கவில்லை ஆத்ம இயல்பை குறிக்கிறது என்பதும் நம்மால் உணர்ந்து கொள்ள முடிகிறது. இவ்வாறு ராமசாமி சங்கரன் ஆகிய இரண்டு வார்த்தைகள் சரீரத்தையும் சரீரத்தை இயக்கம் சரீரியையும் குறித்து இரண்டும் ஒன்று என்பது போல் நமக்கு காட்சி அளிக்கிறது.

இதே போலவே தான் பிரஹமம், ஏகமேவ என்ற வேத வார்த்தைக்கு பொருள் கொள்ள வேண்டும். உயிர், ஜடம் ஆகிய இரண்டு வகுப்புகளை பிரம்மம் தனது சரீரமாக கொண்டிருக்கிறது என்பதே வேத வாக்கியத்தின் பொருளாகும் இதை வைத்து தான் விசிஷ்டாத்வைத தத்துவத் தை ஸ்ரீ வைஷ்ணவத்திற்கு ஆதார தத்துவமாக ஸ்ரீ ராமானுஜர் கொண்டு வந்தார் அதாவது ஸ்ரீ வைஷ்ணவத்தின் உண்மையான பொருள் கடவுளுடைய சரீரமாக அதாவது உடம்பாக இந்த உலகம் இருக்கிறது அவர் உலகத்தில் வேறுபட்டவராகவோ அல்லது உலகம் அவரிட மிருந்து வேறுபட்டதாகவோ இல்லை இரண்டும் அருகில் இருந்தாலும் எண்ணெயும் தண்ணீரும் போல பிரிந்து இருக்கிறது. ஆனாலும் ஒன்றை ஒன்று எப்போதும் பிரியாது என்பதே இதன் மைய கருத்தாகும்.




இங்கே இந்த நீண்ட விளக்கத்தை சொல் வதற்கு மிக முக்கிய காரணம் உண்டு பொதுவாக நம் அனைவருக்கும் ஒரு கேள்வி அடிக்கடி தோன்றும் அதாவது இறைவன் எப்படி இருக்கிறான்? அவனது இயக்கத்தை எதை வைத்து நாம் அறிந்து கொள்வது என்பதேஅந்த கேள்வியாகும் இதற்கு மிக சரியான விளக்கத்தை ஸ்ரீ வைஷ்ணவம் தருகிறது அதாவது இந்த உலகத்தையும் உயிர்களையும் இயக்குபவன் இறைவன் அவன் இவை அனைத்தையும் அல்லது அனைத்திற்குள்ளும் வியாவித்து நின்று இயக்குகிறான் நமது உடலை உயிர் எப்படி இயக்குகிறதோ அதே போலவே உயிரை இறைவன் இயக்குகிறான் அப்படி இயக்கம் சக்தியாக எது இருக்கிறதோ அது தான் இறைவன் அது தான் இறைவனின் செயல்பாடு என்று ஸ்ரீ வைஷ்ணவம் தெளிவாக சொல்கிறது.




இறைவனை பொருத்தமட்டில் அவனது உடல் நமது உயிர்களாகும். உயிர்கள் மட்டுமல்ல அண்டசராசரம் அனைத்துமே இறைவனின் உடலாக இருக்கிறது. ஆக காணுகின்ற காணப்படுகின்ற பொருள்கள் அனைத்துமே இறைவன் தான் அந்த பொருள்களுக்குள் சதா சர்வகாலமும் நிற்காமல் இயங்கி கொண்டிருக்கும் இயக்கு சக்தியும் இறைவன் தான் இதில் இன்னொரு விசேஷம் அடங்கி இருக்கிறது நமது உடம்புக்கு சுதந்திரம் என்பது அவ்வளவாக கிடையாது நம் இஷ்டப்படி உடலை பேன முடியாது அப்படி பேணினால் உடல்

விரைவில் கெட்டு போய்விடும். எனவே உடல் விரும்புகிறப்படி அதை விட்டு விட முடியாது ஆனால் உயிர் சர்வ சுதந்திரமானது அதை நம்மால் கட்டுபடுத்தவோ நிறுத்தி வைக்கவோ கட்டளை இடவோ முடியவே முடியாது.

அதே போலவே இறைவனின் சரீரமாக இருக்கும் உலகத்துக்கும் அண்ட சராசரங்களுக்கும் சுதந்திரம் என்பது கிடையாது அவைகள் தன்னிஷ்டப்படி செயல்படவும் முடியாது அப்படி செயல்பட்டால் அழிவு மட்டுமே ஏற்படும் ஆனால் அவைகளை இயக்கும் உயிராகிய இறைவனுக்கு சர்வ சுதந்திரம் உள்ளது. தத்வமசி என்று உபநிஷத் சொல்கிறது அதாவது நீ அதுவாக இருக்கிறாய் என்பது இதன் பொருள் அதே உபநிஷத் அகம் பிரம்மாஸ்மி என்றும் சொல்கிறது அதாவது நானே பிரம்மம் என்பது இதன் பொருள் இதை அத்வைதிகள் கடவுள் மட்டுமே நிஜம் மற்ற அனைத்தும் நிழல் என்று பொருள் கொள்கிறார்கள் ஆனால் வைஷ்ணவம் இதை அந்த நோக்கில் காணவில்லை.

தத்வமசி என்ற வார்த்தையில் துவம் என்ற சொல் மறைந்திருக்கிறது இச்சொல் நீ என்ற பொருளை நேரடியாக சொன்னாலும் உனக்குள்ளே என்ற பொருளையே இதயமாக கொண் டிருக்கிறது அப்படி என்றால் உபநிஷத் உனக்குள் இருக்கும் இறைவன் உலகுக்கு வெளியேயும் இருக்கிறான் அல்லது வெளியே உள்ள இறைவன் உள்ளேயும் இருக்கிறான் அதாவது வெளியே உள்ள இறைவன் எப்படி சர்வ சுதந் திரம் பெற்றவனோ அதே போல உனக்குள் இருக்கின்ற இறைவனும் சுதந்திரம் உடையவன் உனக்குள் இறைவன் இருப்பதை உணர்ந்துகொள் என்பதே இந்த வார்த்தையின் உண்மை பொருளாகும். என்று ஸ்ரீ வைஷ்ணவம் விளக்கம் தருகிறது.

நானே கடவுள் என்றால் கடவுளுக்கு இருக்கும் சக்தி அனைத்தும் எனக்குள் இருக்க வேண்டும் ஆனால் நிலைமை அப்படி அல்ல என் உடம்பு கடவுளின் இருப்பிடமாக இருக்கலாம் அதனால் உடலை கடந்து உள்ளுக்குள் பிரகாசிக்கும் இறைதரிசனத்தை பெறுவதே எனது நோக்கமாக இருக்க வேண்டும் என்பதே வைஷ்ணவத்தின் மைய கருத்து இதுதான் நம்மை போன்ற சாதரண மனிதர்களுக்கு பொருந்தி வரக்கூடிய கருத்தாகும். நானும் கடவுளும் ஒன்றல்ல அதே நேரம் கடவுள் எனக்குள் இருக்கிறான் அவனை நான் நெருங்க நெருங்க அவன் தனது அருள் மழையால் என்னை நனைத்து என் பாவங்களை கழுவி என் கர்ம தளைகளை கட்டவிழ்த்து ஜீவன் முத்தனாக மாற்றுகிறான் அப்படி மாறும் போது நானும் கடவுளும் ஒன்றை போல் இருப்பதை உணர்வேன் என்ற எண்ணம் நமக்குள் வரவேண்டும் என்பதே வைஷ்ணவத்தின் நோக்கமாகும்.

அதாவது ஒரு பொம்மை உப்புக்கல்லால் செய்யபட்டிருக்கிறது. இப்போது இது உப்பாக இருந்தாலும் கடலில் உள்ள உப்பாக இல்லை அதே வேளை பொம்மை சமூத்திரத்தில் விழுந்துவிட்டால் சிறிது சிறிதாக தனது இருப்பை இழந்து கடலோடு கடலாக கலந்துவிடும் பக்தனும் அப்படி தான் பகவானை தனது இதையத்தில் சுமந்து கொண்டு இருந்தாலும் இதயதாமரையில் வீற்றிருக்கும் திருமாலின் திருவடியில் தன்னை பூரணமாக அற்பணிக்கும் போது பகவத் தன்மையை தானாக பெற்று விடுகிறான் ஸ்ரீ ராமச்சந்திரனால் அரவணைக்கப்பட்ட ஹனுமானும் ராமனை போல் மாறிவிட வில்லையா? அதே போலவே சாதாரண பக்தனும் ஆவான் என்பதே வைஷ்ணவத்தின் முடிவாகும்.



யோகி
ஸ்ரீ ராமானந்த குரு


யோகி ஸ்ரீ ராமானந்த குரு

மேலும் தொடர்பு கொள்ளவும்

போன்: 09442426434






மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் “ஆன்மிகமலர் மெயில் புத்தகம்” aanmeegamalar.com

இணையதளத்தில் இலவசமாக டவுன்லோடு செய்தும் படிக்கலாம்









# உலக அமைதிக்காக நொய்டாவில் நடைபெற்ற ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம லட்சார்ச்சனை



வேத பிரசார சன்ஸ்தான் (VPS), நவராத்திரி விழாவை ஒட்டி, 'உலகளாவிய அமைதிக்காக' ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம லட்சார்ச்சனையை, செப்டம்பர் 30 ஆம் தேதி வெள்ளிக்கிழமை, ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவில் வளாகத்தில், செக்டார் 62, நொய்டாவில் ஏற்பாடு செய்தது. லட்சார்ச்சனையில் அறுபதுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டனர், மேலும் பிரம்மஸ்ரீ ஸ்ரீராம் வாத்யாரின் மேற்பார்வையில் கோயில் அர்ச்சகர்கள் ஸ்ரீ மணிகண்டன் சர்மா மற்றும் ஸ்ரீ மோஹித் மிஸ்ரா ஆகியோரின் உதவியோடு நடத்தப்பட்டது.

லட்சார்ச்சனைக்கு தேவையான பல்வேறு வகையான பூக்கள், குங்குமம் மற்றும்பூஜை பொருட்களை கோவில் நிர்வாகத்தினர், ஏற்பாடு செய்திருந்தனர். மேலும், இதையொட்டி, கோவிலில் 'கொலு'வைத்தனர்.

தென்னிந்திய மரபுகளின் செழுமையான விழுமியங்களைத் தொடரவும், அடுத்த தலைமுறை முன்னோக்கி கொண்டு செல்லவும், கோயில் நிர்வாகம், இந்த 'கொலு'வை அதன் இரு வளாகங்களிலும் வைத்து வருகிறது. இந்த 'கொலு', தினமும் ஏராளமான பக்தர்களால் ஈர்க்கப்பட்டு வருகிறது.

நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக வைக்கப்பட்டுள்ளது, மேலும் இரண்டு முறை பரிசுகளையும் பெற்றுள்ளது.

பக்தர்கள் பல்வேறு பாடல்களைப் பாடி, தேவியைப் போற்றி, மகா தீபாராதனையுடன், அனைவருக்கும் மகா பிரசாதம் வழங்கப்பட்டதுடன் நிகழ்ச்சி நிறைவடைந்தது. சக்கரைப் பொங்கல், கேசரி, புட்டு, சுண்டல், எலுமிச்சை, தேங்காய், தயிர் சாதம் உள்ளிட்ட பிரசாதம், பூஜையில் இறைவனுக்கு படைக்கப்பட்டது.

இந்தப் பிரசாதங்களை ஒவ்வொருவரும் தங்கள் வீடுகளில் தயாரித்து கொண்டுவந்தனர்.

இந்நிகழ்ச்சியில், ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம லட்சார்ச்சனையை ஏற்பாடு செய்த ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாம மண்டலி தலைமையிலான அர்ப்பணிப்புக் குழுவினரை கோயில் நிர்வாகத்தினர் பாராட்டினர்.



எஸ்.வெங்கடேசன்

– எஸ்.வெங்கடேசன்,
நொய்டா
தொடர்பு எண்: 9811161370

# நவராத்திரியில் அம்மனை தொடர்ந்து தரிசித்தால்

# முக்திப்பேறு கிடைக்கும்




- ❖ சோழர் காலத்தில் நவராத்திரி திருவிழா அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது.
- ❖ நவராத்திரி நாட்களில் பெண்கள் கன்யா பூஜை செய்வதால் சகல செல்வங்களையும் பெறலாம்.
- ❖ விஜயதசமி தினத்தன்று பெருமாள் கோவில்களில் வன்னி மரக்கிளையை வைத்து அதில் பெருமாளை எழுந்தருளச் செய்து பூஜை நடத்துவார்கள். இந்த வழிபாட்டில் கலந்து கொண்டால் கிரக தோஷங்கள் விலகி ஓடி விடும்.
- ❖ நவராத்திரி பண்டிகையை முதன் முதலில் ராமர்தான் கொண்டாடியதாக புராணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ❖ நவராத்திரி நாட்களில் இரவு 7 மணி முதல் 9.30 மணி வரை தேவி வழிபாடு செய்ய உகந்த நேரமாகும்.
- ❖ ஈசனம், அம்மையும் ஒன்று சேர்ந்து ஊஞ்சலில் ஆடுகின்ற தரிசனத்தை 9 நாட்களும் கண்டால் நவராத்திரி பூஜை செய்த பலன் கிடைக்கும்.
- ❖ நவராத்திரி நாளில் வரும் சப்தமி திதியன்று வழிபட்டால் ஸ்ரீஹயக்ரிவப் பெருமாளின் அருளைப் பெறலாம். அன்று ஸ்ரீலலிதாசகரஸ்ர நாமத்தையும் நவாக்சரி மந்திரத்தையும் ஓதுவது கூடுதல் பலன்களைத் தரும்.
- ❖ பிரம்ம நவராத்திரி, கிருஷ்ண நவராத்திரி, ரிஷி நவராத்திரி, தேவ நவராத்திரி, பஞ்சகல்ப நவராத்திரி, பாக்ய நவராத்திரி, போக நவராத்திரி, தாத்பர்ய நவராத்திரி, சற்குரு நவராத்திரி, தேவதா நவராத்திரி என்று பல வகை நவராத்திரிகள் உள்ளன.
- ❖ பங்குனி மாதம் அமாவாசைக்குப் பிறகு

ஆன்மிகமலர்.காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!




பிரதமையில் தொடங்கும் லலிதா நவராத்திரி, மாசி மாதம் வரும் ராஜ மாதங்கிநவராத்திரி ஆடியில் வரும் மகாவராகி நவராத்திரி, புரட்டாசியில் வரும் சாரதா நவராத்திரி ஆகிய 4 நவராத்திரிகளையும் பெண்கள் கடைபிடித்தால் அம்பிகையின் அருளை பரிபூரணமாகப் பெறலாம்.

❖ அனைத்திலும் தேவியே உள்ளாள் என்பதை உலகுக்கு உணர்த்தவே நவராத்திரி நாட்களில் கொலு வைக்கப்படுகிறது.

❖ எல்லாரும் புரட்டாசி நவராத்திரியில் மட்டுமே கொலு வைக்கிறார்கள். ஆனால் 4 நவராத்திரி நாட்களிலும் கொலுவைத் தால்தான் அம்பிகை அருள் கிடைக்கும்.

❖ வீட்டில் கொலு வைத்தால், அம்பிகை அனைத்து அம்சமாக நம் வீட்டில் எழுந்தருளி விட்டாள் என்பது நம்பிக்கையாகும்.

❖ ஒரு நவராத்திரிக்கு கொலு வைத்தால் பிறகு வாழ்நாள் முழுவதும் நவராத்திரி நாட்களில் கொலு வைக்க வேண்டும் என்கிறார்கள்.

❖ நவராத்திரி பூஜையை அஸ்தம், சித்திரை அல்லது மூலம் நட்சத்திர நாட்களில் தொடங்குவது நல்லது. இந்த நாட்களில் வைதிருதி யோக நேரம் இருந்தால் மிகவும் நல்லது.

❖ விஜய தசமி தினத்தன்று ஸ்ரீ ஆயுர் தேவியை போற்றி வழிபட வேண்டும். இதுதான் நவராத்திரி பூஜையின் நிறைவான பூஜையாகும்.

❖ நவராத்திரி நாட்களில் பகலில் சிவ பூஜையும் இரவில் அம்பிகை பூஜையும் செய்வதே சரியான வழிபாடாகும்.

❖ நவராத்திரி 9 நாட்களும் தினமும் பகலில் 1008 சிவ நாமாவளிகளை ஜெபித்து வழிபாட்டால் அளவிடற்கரிய பலன்கள் கிடைக்கும்.

❖ நவராத்திரி வழிபாட்டை தினமும் தொடங்கும் போது ஸ்யவன மகரிஷியையும் சுகன்யா தேவியையும் தியானித்தபடியே தினசரி பூஜையை தொடங்க வேண்டும்.

❖ நவராத்திரி நாட்களில் சுண்ணாம்பு மாவினால் கோலம் போடக்கூடாது. அரிசி மாவைப் பயன்படுத்திதான் கோலமிட வேண்டும். அவ்வாறு செய்வதால் குடும்ப ஒற்றுமையும், செல்வமும் வளரும். சுண்ணாம்பு மாவு பயன்படுத்தினாலோ, எதிர்மறையான விளைவுகளே உருவாகும்.

❖ ஒன்பது நாட்களிலும் தேவியாக பாவித்துத் துதிக்க, நமக்குச் சொந்தமல்லாத, பிறர் வீட்டுக் குழந்தையையே அழைத்து வந்து உபசரிக்க வேண்டும். நம் வீட்டு அல்லது நம் உறவினர்களின் குழந்தைகளையே தேர்ந்தெடுப்பது கூடாது.

❖ தினந்தோறும் நவராத்திரி பூஜையின் நிறைவாக, பலவிதமான மங்கலப் பொருட்களை (மஞ்சள், குங்குமம், வளையல்,ரிப்பன் போன்றவை) ஏழைகளுக்கு தானமாக

அளிக்க வேண்டும்.

- தனித்து தானம் செய்வதை விட, சத்சங்க மாகப் பலரும் ஒன்று சேர்ந்து, மங்கலப் பொருட்களை மிகப் பெரிய அளவில் தானமாக அளிப்பதே சிறப்பானது.
- தான தர்மங்கள்தான் நவராத்திரி பூஜைகளை நிறைவு செய்ய உதவிகின்றன. ஆகவே நவராத்திரியில் தானமளிப்பதே மிகமிக முக்கியம்.
- கன்னிப் பெண்களுக்குப் புதிய ஆடை முதலியவை பரிசாக அளிக்கப்படவேண்டும் என்பது நவராத்திரி விழாவின் முக்கிய அம்சமாகும்.
- நவராத்திரி ஒன்பது நாளும் பூஜையைத் திருமகளே ஏற்றுக் கொள்கிறாள்.
- சரஸ்வதி பூஜை என்ன கிழமையானாலும் கடலை சுண்டல் எதுவும் செய்ய முடியாத வர்கள் பழங்கள் கொடுக்கலாம்.
- நவதானியச் சுண்டல் நவக்கிரக நாயகர் களைத் திருப்திப்படுத்தும். கோள்களால் வரக்கூடிய துன்பங்களைத் தடுக்கும்.
- ஷோடச லஷ்மி பூஜை நவராத்திரி வெள்ளிக் கிழமையில் செய்தால் ஐஸ்வர்யம் பெருகும். இது கிரியா சக்தி வழிபாடு.
- நவராத்திரி காலத்தில் முடிந்தவரை பாரா யணம் செய்வது தேவிக்கு அளவில்லாத மகிழ்ச்சியைத் தரும்.
- அந்த நாளில் கொலுவுக்கு வரும் கன்னி யரின் நடையுடை, பாவனை, பேச்சு, பாட்டு, நடந்து கொள்ளும் விதம் இவற்றை முனிவர்கள் தீர்மானித்து தன் மகனுக்கோ, தன் உறவினர் மைந்தனுக்கோ இவள் ஏற்றவள் என்று தீர்மானிப்பர். பல திருமணங் கள் அப்படி முடிவாகி கார்த்திகை அல்லது தையில் நடந்திருக்கின்றன.
- நவராத்திரி விரதம் இருப் பவர்கள் தரையில் தான் படுத்து தூங்க வேண்டும்.
- அம்பிகை சங்கீதப் பிரியை. எனவே நவராத்திரி நாட்களில் தினமும் ஏதாவது ஒரு பாட்டாவது பாட வேண்டும்.
- நவராத்திரி 9 நாட்களும் மகா சக்தியை ஐதீகப்படி வணங்கினால் முக்திப் பேறு உண்டாகும்.
- நவராத்திரி கோலத்தை செம்மண் கலந்து போட்டால் அம்பாள் மனமகிழ்ந்து வருவார்.
- நவராத்திரி 9 நாட்களும் வாசலில் மாவிலை கட்டி பூஜை செய்தால் ஐஸ்வர்யம் உண்டாகும்.



- கொலு வைத்திருப் பவர்கள் அதன் முன் நவக் கிரக கோலம் போட்டால் அம்பாள் அனுக்கிரகமும், நவக்கிரகப் பலன்களும் கிடைக்கும்.
- நவராத்திரி 9 நாட்களும் வீட்டுக்கு வரும் சுமங்கலி பெண்களுக்கு பரிசுப் பொருட்களுடன் பூந்தொட்டி, புத்தகத்தை தானமாக கொடுக்கும் பழக்கம் கடந்த சில ஆண்டுகளாக சென்னையில் அதிகரித் துள்ளது.
- முத்தாலத்தி என்றொரு வகை கோலம் உள்ளது. நவராத்திரி நாட்களில் இந்த வகை கோலம் போட்டால் அம்பாள் அருள் நமக்கு எளிதாக கிடைக்கும்.
- நவராத்திரி 9 நாட்களில் வரும் வெள்ளிக் கிழமையன்று 5 சுமங்கலி பெண்களுக்கு அன்னதானம் செய்து புடவை மற்றும் தாம்பூலம் கொடுத்து ஆசி பெற்றால்

உடனடியாக திருமணம் கைகூடும்.

- ❖ நவராத்திரி 5ம் நாளான வரும் திங்கட் கிழமை லலிதாம்பிகையின் அவதார தினமாக கொண்டாடப்படுகிறது. அன்று 9 சிறுமிகளுக்கு பட்டுப்பாவாடை தானம் செய்தால் நினைத்தது நடக்கும்.
- ❖ நவராத்திரி 9 நாட்களும் சர்க்கரைப் பொங்கல், உளுந்து வடை, நைவேத்தியம் செய்தால் கூடுதல் பலன்கள் கிடைக்கும்.
- ❖ நவராத்திரி தொடர்பான சுலோகம் மந்திரம் தெரியவில்லையாப கவலை படாதீர்கள் ஓம் ஸ்ரீ லலிதா தேவியே நம என்பதை 108 தடவை சொன்னாலே போதும். உரிய பலன் கிடைக்கும்.
- ❖ நெமிலியில் திரிபுர சுந்தரி கோவில் உள்ளது. இந்த கோவிலில் ஒரு நவராத்திரிக்கு கலசத்தில் வைக்கப் படும் தேங்காய் அடுத்த ஆண்டு நவராத்திரி வரை கெடாமல் இருக்கும்.
- ❖ நவராத்திரி நாட்களில் முப்பெரும் தேவியரின் கதைகளை கேட்டால் அம்மைநோய் தாக்காது என்பது நம்பிக்கை.
- ❖ சுகமான வாழ்வு வேண்டும், கல்வியில் சிறந்து விளங்க வேண்டும், அரசியலிலும், வேலையிலும் பதவி தொடர வேண்டும்,எந்த தொழிலில் ஈடுபட்டாலும் வெற்றி மீது வெற்றி பெற வேண்டும் என்று நினைப்பவர்கள் நவராத்திரி பூஜையை அவசியம் செய்ய வேண்டும்.



கீதா-ராஜன்

- ❖ ராமபிரான் நவராத்திரி விரதத்தை கடைபிடித்த பிறகுதான் அவருக்குச் சீதை இருக்குமிடம் தெரிந்தது என்று தேவி பாகவதம் சொல்கிறது.
- ❖ கொலு பொருட்களை பாதுகாக்க வேண்டியது முக்கியம். அவைகளில் மந்திர ஆவர்த்தி இருக்கும்.
- ❖ தேவியை நவராத்திரி சமயத்தில் ஒன்பது மடங்கு அதிகமாகப் பூஜிக்க வேண்டும் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது.
- ❖ ஸ்ரீராமர், விஷ்ணு, விசுவாமித்திரர், காளிதாசர், அபிராமி பட்டர், பிரம்மா, வனவாசத்தில் பாண்டவர்கள் ஆகியோர் நவராத்திரி பூஜைகள் செய்து அம்பிகையின் அருளுக்குப் பாத்திரமானார்கள் என்று புராணங்கள் சொல்கின்றன.
- ❖ வசதி, வாய்ப்பு உள்ளவர்கள் நவராத்திரி பூஜையை தினமும் முறைப்படி ஸங்கல்பம், கணபதி பூஜை, ப்ரதான பூஜை, கண்டா பூஜை ப்ராணப் பிரதிஷ்டை, அங்கபூஜை, அஷ்டோத்திர நமாவளி, நவதுர்கா பூஜை, ஜோதி பூஜை என்று விஸ்தாரமாகச் செய்யலாம்.

– கீதாராஜன்

தொடர்பு எண்: 9444228203



ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

# மரணத்தினால் அழிக்கப்பட முடியாத, இறைவனின் எண்ணங்களால் நாம் ஆக்கப்பட்டிருக்கிறோம்

ப்ரிய குருதேவர் அருளுகிறார்: "நீங்கள் வாழ்க்கையின் மையப்பகுதியை மட்டும்தான் காண்கிறீர்கள்; அதன் தொடக்கத்தையோ அல்லது முடிவையோ நீங்கள் காண்பதில்லை. இத்தனை அறிவாளிகளாகவும் உயிர்த்துடிப்போடும் இருக்கும் நாம் மரணத்தின் நித்திரையில் ஆழ்ந்தவுடனே வாழ்வு முடிந்துவிட்டது, மரணம்தான் முடிவு என்று ஊகம் செய்வது பகுத்தறிவுக்குக்கூட ஏற்றதல்ல. மனித இருப்பு முழுவதுமே இறைவனின் படைப்பு எண்ணங்களாலும், உணர்வு நிலையாலும் ஆன ஒரு தொகுப்பு. இதை தேக மரணத்தினால் அழிக்க முடியாது. மரணம்தான் முடிவு என்றால் இறைவனும் இல்லை, முற்றும் உணர்ந்த முனிவர்களும் இல்லை. எல்லாமே பொய்தான். மகான்களும் நீங்கள் நல்லவர்களாக ஆக வேண்டும் என்று வற்புறுத்தமாட்டார்கள். ஏனெனில் நல்லவர்களோ, கெட்டவர்களோ வாழ்க்கையின் முடிவில் நாம் எல்லோருமே கழிக்கப்படுவோமானால், அதனால் என்ன பயன்? சாத்திரங்களால் என்ன பயன்? நல்லவர்கள் இன்னும் நல்லவர்களாக ஏன் முயற்சி செய்ய வேண்டும்? ஒவ்வொரு தனிப்பட்ட உயிருக்கும் இந்த நிகழ்கால வாழ்வுதான் எல்லாமே என்றால் அதில் எந்தவிதமான நியாயமும் இருக்காது. சில வருடங்கள் மட்டுமே வாழ்ந்த அல்லது கண்பார்வையற்ற அல்லது முடமான உடல்களில் வாழ்ந்த ஆன்மாக்கள் பற்றி என்ன சொல்வது?"

நீங்கள் நேசித்தவர்களைக் கண்டுபிடிப்பதற்கான சரியான வழியை தெரிந்து கொள்ளுங்கள்.

குருதேவர் தொடர்கிறார்: " உண்மையான ஆன்மீகம் ஓர் அற்புதமான விஞ்ஞானம். இது, இந்த உலகத்திற்கு அப்பாலும் ஒரு வாழ்க்கை இருக்கிறது என்பதையும், நம்மால் நேசிக்கப்பட்டவர்கள் அனைவரும் பூத உடலை துறந்திருந்தாலும், உண்மையாகவே தொடர்ந்து வாழ்கிறார்கள் என்பதையும் நாம் தெரிந்துகொள்ள உதவுகிறது. ஆனால் ஆவி உலகைப்பற்றி அறிவதற்கான உண்மையான தேடலின் அர்த்தத்தை ஆன்மீகத்தைப்பற்றிய பயிற்சி இந்நாட்களில் கடை பிடிக்கப்படுபவை

140
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக



ஞ கெடுத்துவிட்டது. தங்களை ஆன்மீகவாதிகள் என்று தாங்களாகவே கருதிக்கொள்ளும் அனேகர், அவர்கள் எதைப்பற்றிப் பேசுகிறார்கள் என்பதை உண்மையில் அறிவதில்லை. சிலருக்கு சிறிது ஞானம் இருக்கிறது. ஆனால் அவர்கள் பெரும்பாலும் தங்களது சொந்த கற்பனை சக்திக்கே பலியாகிவிடுகிறார்கள். அல்லது அதைவிட மோசமாக, தங்கள் அடிமனநிலையில், மனித வாகனத்தைத் தேடும் அலைந்து திரிகின்ற உடலற்ற ஆவிகளால் ஆட்கொள்ளப்பட்டவராகின்றனர். இப்படிப்பட்ட அலைந்து திரியும் ஆவிகள் தாங்கள் பீடித்திருக்கம் சாதனமாகிய மனிதனை – மற்றும் தன் அறிவுரையை நாடுபவர்களை மறைமுகமாகவும் – ஏமாற்றி தவறான வழிகாட்டுகின்றன.”



குருப்ரியா

அவர் தொடர்கிறார்: “ ஒரு முறை நான் சில மாணவர்களுடன் ஒரு கூட்டத்தில் உட்கார்ந்திருந்தேன். அதில் குறி சொல்லும் ஒரு பெண்மணியும் இருந்தாள். இந்த குறி சொல்லுபவளைச் சுற்றி ஒரு கூட்டமே திரண்டிருந்தது. நான் அமைதியாக அவளைக் கவனித்துக்கொண்டிருந்தேன். விரைவிலேயே நான் புரிந்துகொண்டேன். அவளிடம் அவர்கள் எழுப்பிய வினாக்களுக்கு உண்மையிலேயே விடையளிக்காமல் அவள் அவர்களிடமே சில வினாக்களை புத்திசாலித்தனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். மாணவர்கள் என்னையும் குறிபார்க்கும்படி வற்புறுத்தினார்கள். அந்த அறை இருட்டாக இருந்ததால் குறி சொல்பவளால் என்னை மிகத்தெளிவாகப் பார்க்க முடியவில்லை. நான் மிக அதிகமான கீச்சுக்குரலில், “என் கணவனை நான் எப்பொழுது விவாகரத்து செய்வேன்?” என்று கேட்டேன். “உடனே இப்பொழுதே” என்று வேகமாக பதில் கூறினாள். பின்பு நான் எழுந்து நின்றவுடன், அவள் என்னுடைய மேலங்கியின் கீழே கால்சட்டைகளைப் பார்த்து விட்டாள். அவள் கோபமாக “நீ என்னை ஏமாற்றிவிட்டாய்” என்று கத்தினாள். ஓர் ஊகத்துடன்தான் அவள் எங்கள் மனங்களைப் படித்துக்கொண்டிருந்தாள். ஆனால் நான் அவள் மனதைப் படித்துவிட்டேன். என்னுடைய நீண்ட கூந்தலினால், அவள் என்னை ஒரு பெண்மணி என்று நினைத்திருந்தாள். அதனால்தான் நானும் அப்படி ஒரு கேள்வியைக் கேட்டு அவளைச் சோதித்தேன்.”

“எனவே ஆன்மீகத்திலும், மற்ற எந்தத் துறையையும்போலவே சில மோசடிப் பேர்வழிகள் இருக்கின்றனர். மேம்பட்ட மனோ சக்தியில் சற்று முன்னேறியவர்களில் பலர் நல்ல எண்ணம்கொண்டவர்களாக இருக்கின்றனர். ஆனால் அவர்களது உளவியல் ஆற்றல்கள் விவேகத்தினாலும் இறை அனுபூதியினாலும் வழிகாட்டப்படுவதில்லை. எப்படி இருந்தாலும் ஆவித்தொடர்புக்குழு மற்றும் சாதனங்கள் மூலமாக ஆவி உலகத்துடன் விளையாடுவது விவேகமற்றதாகும். அது அபாயகரமானதும், ஆகக்கூடும். அம்மாதிரியான வழிமுறைகள் மூலமாக நீங்கள் மகான்களுடன் தொடர்புகொள்ள முடியாது. அப்படியும் ஏதாவது ஆவிகளை வரவழைத்தால் அவைபெரும்பாலும் சூட்சும உலகின் தாழ்ந்த பகுதிகளைச் சார்ந்ததாக இருக்கும். ஆனால் நீங்கள் உண்மையிலேயே சிரத்தை உள்ளவர்களாக இருந்தால், தியானம் மற்றும் ஆன்மீக முன்னேற்றத்தின் மூலம் இறந்துவிட்ட அன்புக்குரியவர்களையோ அல்லது உயர்ந்த மகான்களையோ தொடர்பு கொள்ள முடியும்.

சூட்சும உலகில் அநேக கோள்கள் இருக்கின்றன.

அன்பு குருதேவர் தொடர்கிறார்: “ நாம் காலையில் விழித்தெழும்பொழுது, நாம் உறங்கச் செல்லும் முன் எப்படியிருந்தோமோ அப்படியே இருக்கிறோம் என்பதைக் காண்கிறோம். அதே மாதிரியாக நாமும் நாம் நேசித்தவர்களும் மரணத்திற்குப்பின்னர் சூட்சும உலகில் விழித்தெழும்பொழுது முற்றிலும் அவ்வாறே இருக்கிறோம், பொதுவாகவே நாம் தோற்றத்தில் அதிக இளமையுடனும் நோயற்றவர்களாகவும் இருப்போம்”

“மரணம் என்னும் கருவியினால் மட்டும் நாம் தேவதைகளாகிவிடுவதில்லை. இப்பொழுது நாம் தேவதைகளாக இருந்தால், பின்னாலும் நாம் தேவதைகளாகத்தான் இருப்போம். நம் இருண்ட மற்றும் எதிர்மறை குணாதிசயங்களை உடையவராக இப்பொழுது இருந்தால், மரணத்திற்குப் பின்னாலும் அப்படியே இருப்போம். இந்த நாட்டில் எப்படி குடிசைகளும், அழகான பகுதிகளும் இருக்கின்றனவோ, அப்படியே மறு உலகிலும் இருக்கின்றன. நீங்கள் பூமியில் உங்கள் வாழ்க்கையை வாழ்ந்த முறைக்கேற்ப ஞ நீங்கள் வாழ்ந்தது ஒரு நல்ல, தூய வாழ்வோ அல்லது தாழ்ந்த, தீய வாழ்வோ ஞ நீங்கள் சூட்சும உலகில் உள்ள ஒளி நிறைந்த பகுதிக்கோ அல்லது இருண்ட பகுதிக்கோ செல்வீர்கள்.




மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர்
மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்

“சூட்சும உலகப்பகுதிகள் பல விதமான சூழ்நிலைகள் அல்லது அதிர்வுகள் கொண்டவையாக இருக்கின்றன. இப்புவியிலிருந்து விடுபட்டுச்செல்லும் ஒவ்வொரு ஆன்மாவும் அதனதன் குறிப்பிட்ட அதிர்வுக்கு இணக்கமாக உள்ள சூழ்நிலை எதுவோ அங்கு ஈர்க்கப்படுகிறது. எப்படி மீன்கள் நீரிலும் புழுக்கள் பூமியினுள்ளும், மனிதன் பூமியின் மேலும் பறவைகள் காற்றிலும் வாழ்கின்றனவோ, அதே போல் சூட்சும உலகில் உள்ள ஆன்மாக்கள் அவற்றிற்கு எந்த அதிர்வுகள் மிகவும் நன்றாகப் பொருந்துகின்றனவோ, அந்த கோளத்தில் வாழ்கின்றன. பூமியில் ஒருவர் எவ்வளவு பெருந்தன்மையுடனும், ஆன்மீக உணர்வுடனும் இருக்கிறாரோ, அந்த அளவு மேன்மையான பகுதிக்கு அவர் ஈர்க்கப்படுகிறார். மேலும் அவரது சுதந்திரமும் , ஆனந்தமும் மற்றும் அழகின் அனுபவமும் அவ்வளவு சிறப்பாக இருக்கும்.”

“சூட்சும உலகில் ஜீவன்கள் வாழ்வதற்கு காற்றையோ அல்லது மின்சாரத்தையோ சார்ந்திருப்பதில்லை. அவர்கள் பலதரப்பட்ட நிறங்கள் கொண்ட ஒளிக்கற்றைகளின் மூலம் வாழ்கின்றனர். ஸ்தூல உலகத்தைவிட சூட்சும உலகில் சுதந்திரம் அதிகம். அங்கே உடைவதற்கு எலும்புகள் கிடையாது.. ஏனெனில் அங்கே திடப்பொருட்கள் கிடையாது; எல்லாமே ஒளிக்கதிர்களால் ஆக்கப்பட்டவை. மேலும் எல்லாமே எண்ணத்தின் சக்தியால் நிகழ்கின்றன. சூட்சும உலகில் உள்ள ஆன்மாக்கள் ஒரு தோட்டத்தை உண்டாக்க விரும்பினால், அவை வெறுமனே அதை சங்கற்பித்துக்கொள்கின்றன. உடனே தோட்டம் படைக்கப்படுகிறது. எதுவரை இருக்கவேண்டும் என்று கங்கற்பிக்கப்படுகிறதோ அதுவரை அந்தத்தோட்டம் இருக்கும். அத்தோட்டம் மறைய வேண்டும் என ஓர் ஆன்மா விரும்பினால், அது மறைந்துவிடுகிறது.”

சூட்சும உலகுடனான தொடர்பு இரகசியமாக பாதுகாக்கப்படும் ஒரு விஞ்ஞானம்.

அன்பு குருதேவர் தொடர்கிறார்: “ சூட்சும உலகிலுள்ள ஆன்மாக்களுடன் தொடர்பு கொள்வது என்பது ஒரு சாதாரண காரியம் அல்ல. அது இயற்கையினால் இரகசியமாக பாதுகாக்கப்பட்டுவரும் ஒரு விஞ்ஞானம். இறைவன் நம்முடைய அன்பை நம் குடும்ப அங்கத்தினர்களுக்கு மட்டும் வழங்க வேண்டும் என்று விரும்புவதில்லை. ஆனால் அதே அன்பை முழு உலகத்திற்கும் அளிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறான். இதைக் கற்பிப்பதற்காகத்தான் நம்முடைய குடும்ப அங்கத்தினர்கள் ஒருவர் பின் ஒருவராக பறிக்கப்படுகின்றனர். இவ்வாறாக நம் அன்பை மற்றவர்கள்பால் திருப்புவதற்கு நாம் கற்றுக்கொள்கிறோம். ஆனால் நாம் தூய்மையாகவும், சுயநலமில்லாலும் நேசித்து ஆன்மீக வளர்ச்சி அடைந்தால் மரணத்தின் பின்னரும், நாம் நேசித்தவர்களுடன் ஒரு தொடர்பை ஏற்படுத்தும் இரகசிய விஞ்ஞானத்தை கற்றுக்கொள்ளலாம்.”

“மனித இதயம் வலிமை வாய்ந்தது மற்றும் பெரும்பாலும் அத்தனை நியாயமற்றதாகவும் உள்ளது ! ஓர் ஆண் ஒரு பெண்ணை சந்திக்கிறான்; இருவரும் காதல் வயப்படுகின்றனர். அவர்கள் வளர்ந்து திருமணம் செய்துகொண்டு, குழந்தைகளையும் பெற்றபின் நினைக்கின்றனர். “இவர்கள் என்னுடையவர்கள்.” சொந்தம் கொண்டாடும் தன்மையானது மக்களை, அவர்கள் சந்திப்பதற்கு முன்பு அன்னியர்களாக இருந்ததையும், மரணம் அவர்களுடைய நடப்பு உறவை துண்டித்துவிடும் என்பதையும் தங்களுக்குச் சொந்தம் என்று அவர்கள் கூறிக்கொள்ளும் குழந்தைகள் ஒரு வாழ்க்கையில் பாதுகாக்கப்படுவதற்காக அவர்களுக்குக் கொடுக்கப்பட்டவர்கள் என்பதையும் மறக்கச் செய்கிறது. அவர்களால் நேசிக்கப்பட்டவர்கள் மரணத்தின் மூலம் பறிக்கப்படும்பொழுது அவர்கள் வருத்தமுற்று வாழ்க்கை என்பது என்ன என்று வியக்கிறார்கள்.”

மேலும் அவர் தொடர்கிறார்:
“ மனிதனுடைய பாசப்பிணைப்பு எப்படிப்பட்டதெனறால் அது நாம் நேசித்தவர்களை இழப்பதனால் நம் இதய்ததில் ஒரு கடுமையான ஏக்கத்தை ஏற்படுத்தி பல சமயங்களில் மனதில் கட்டுக்கடங்காத

எண்ணங்களை உண்டாக்குகிறது. நான் சிறுவனாக இருந்தபொழுதே என்னுடைய தாயாரின் மரணத்திற்கு வெகு முன்னரே அவர் இறந்துவிடப்போகிறார் என்பதை என்னுடைய ஆழ்ந்த உள்ளுணர்வில் அறிந்திருந்தேன். அவர் இறந்தபோது, நான் கதறிக் கதறி அழுதேன். எல்லா இடங்களிலும் நான் தேடினேன். ஆனால் அவரை காணமுடியவில்லை. நான் பிரார்த்தனை செய்தேன். தெய்வ அன்னையே, நீ இங்கிருக்கிறாய் என்றால், எனக்கு நீ பதில் கூறித்தான் ஆக வேண்டும். நீ ஏன் என் தாயார் மீது அதிக அன்பை பொழியுமாறு செய்து, பிறகு அவரை என்னிடமிருந்து பிரித்தாய்? இது என்னை தண்டிப்பதற்காகவும் சித்திரவதை செய்வதற்காகவுமா? அப்பொழுது பராசக்தி, "உனக்கு தாயாரைத் தந்தது யார்?," உனக்கு தந்தையைத் தந்தது யார்? உனக்கு உன்னுடைய அழகான தாயாரைத் தந்தது நான்தான்," என்று பதிலிறுத்தாள். இறைவனருளால்தான் நான் அதுபோன்ற ஓர் அற்புதமான தாயாரைப் பெற்றேன் என்று நான் அறிந்தபொழுது, "இறைவன் மட்டுமே வாழ்க்கையின் இந்த மர்மத்திற்கு திறவுகோல் வைத்திருக்கிறான்," என்று நினைத்தேன். பின்பு நான் எனக்குள் மிகவும் ஆழ்ந்து தேடவும் பிரார்திக்கவும் ஆரம்பித்தேன். தெய்வீக அன்னை பதிலிறுத்து என்னுடைய தாயார் ஏன் பறித்துக் கொள்ளப்பட்டார் என்பதை என்னிடம் கூறினாள்: "உன்னை ஒவ்வொரு பிறப்பிலும் அனேகத்தாய்மார்களின் மென்மையான அன்பின்மூலம் பாதுகாத்து வந்தது நானே! நீ இழந்து தேடும் அந்த இரு அழகிய கருவிழிகளை என் பார்வையில் காண்பாய்!"

அவர் மேலும் தொடர்கிறார்: " நான் அன்னை பராசக்தியைப் பார்த்தபிறகு, சூட்சும உலகில் என்னுடைய இந்த பூவுலகத் தாயாரை மீண்டும் பார்த்து பேசினேன். இந்த மாதிரியான தொடர்பு சாத்தியம்தான். உங்களை நீங்கள் ஒரு ஒலிபரப்பும் கருவியாகவோ அல்லது ஒலியை ஏற்கும் கருவியாகவோ மாற்றிக்கொள்ளமுடியும். இறந்துவிட்ட உங்கள் அன்புக்குரியவரின் ஆன்மாவைக் குறித்து மிகவும் தீவிரமாகவும் தொடர்ந்தும் தியானிப்பதன் மூலம் அவரைத் தேடினால், நீங்கள் நிச்சயமாக ஒரு பதிலைப்பெறுவீர்கள். ஆனால் உங்கள் விருப்பம் தேவையான அளவு தீவிரமாக இல்லாவிடில், உங்களுடைய அலைபாயும் எண்ணங்கள், உங்களுடைய தியானத்தின் ஒருமுகப்பாட்டைக் குலைத்துவிடும். நீங்கள் உங்கள் இதயத்தின் செய்தியை ஓர் ஆன்மாவிற்கு ஒலிபரப்பும்பொழுது, உங்கள் எண்ணங்கள் இங்குமங்கும் ஓடிக்கொண்டிருந்தால் உங்களுடைய ஒலிபரப்பானது துண்டிக்கப்பட்டுவிடும். மறு உலகிற்குச் சென்றுவிட்ட ஆன்மாவைத் தொடர்புகொள்ள உங்களுக்கு பேரவாவும் பேராற்றல் மிக்க மன ஒருமுகப்பாடும் மிகவும் அவசியம். மேலும் நீங்கள் அந்த ஆன்மாவிற்கு உங்கள் எண்ணங்களை தொடர்ந்து அனுப்பிக்கொண்டே இருக்கவேண்டும். தவிரவும், நீங்கள் எந்த ஆன்மாவிற்குச் செய்தி அனுப்புகிறீர்களோ, அந்த ஆன்மாவும் செய்தியை ஏற்று உங்களுடைய அழைப்பிற்குப் பதில் கூற தேவையான வளர்ச்சியைப்பெற்றிருக்க வேண்டும். உங்களுடைய உணர்வு நிலையுடன் பொருந்தி இருக்கும் ஆன்மாக்களுடனும், நீங்கள் யாருடன் ஆழ்ந்த பாசமும் நெருக்கமான உறவும் வைத்திருந்தீர்களோ அவர்களுடனும் தொடர்புகொள்வது மிகவும் சுலபம். மிகவும் அதிக வளர்ச்சியடைந்த ஆன்மாக்களுடன் தொடர்பு கொள்வதற்கு இதைவிட மிக அதிக சக்தி வாய்ந்த மன ஒருமுகப்படுதல் தேவையாகிறது."

ப்ரிய குருதேவர் கூறுவதுபோன்று நாம் நேசித்தவர்களைக் கண்டுபிடிப்பதற்கான சரியான வழியைத் தெரிந்துகொள்வதற்காக அல்லது சூட்சும உலகம் செல்வதற்காக நாம் செய்யவேண்டியது என்னவென்றால் தியானம் ஒன்று மட்டும்தான். தியானத்தில் ஆழ்ந்து செல்லச்செல்ல தெரிய வேண்டியது அனைத்தும் நமக்குத்தெரியவரும். உதாரணமாக நாம் நமது வாழ்க்கையில் பல நதிகளைப்பார்க்கிறோம். அவ்வாறு நாம் போகும் வழியில் ஒரு பெரிய நதி ஓடிக்கொண்டிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அந்த நதியில் இறங்க முடியாது; இறங்கினால் வெள்ளம் நம்மை அடித்துக்கொண்டுபோய்விடும். அதனால் நதியில் இறங்காமல் வேறு வழியாக நாம் செல்வோம். அவ்வாறு செய்தால் எளிதில் ஆற்றைக் கடக்கலாம். அதுபோன்றுள்ளதுதான் தியானத்தால் எளிதில் இறைவனன அடைவதற்கான உத்திகளைச்செய்ய குருதேவர் கூறுகிறார். அந்த உத்திகளை தியானத்தின்போது பயன்படுத்தினால் நம் கண்களுக்கு எட்டாதவற்றை எல்லாம் நாம் பார்க்க முடியும். எனவே தியானத்தால் மனமென்னும் மாயையை வென்று நம் ஆன்மாவை இறைவனுடன் சேர்க்கலாம். இதுதான் முக்கியமான நம் கடமை.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி கலியபெருமாள்)
சர்பதிவாளர் (ஓய்வு) Cell No.9894595909




அற்புதமான தகவல்களுடன்,

ஆன்மிகமலர்.காம் வழங்கும்

2023-ம் ஆண்டு மாத காலண்டர்

அற்புத தகவல்களுடன் தயராகிறது

குறைந்த விலையில் 100, 200, 500, 1000

எண்ணிக்கையில் தேவைப்படுபவர்கள்

தொடர்பு கொள்ளவும்

மேலும் தகவல்களுக்கு: 9994162182

# இயற்கை மருத்துவம்

- ❖ வாழைப்பூவை சமையலில் வாரம் ஒருமுறை சேர்த்து வர வயிற்றுப்புண் குணமாகும்.
- ❖ கானா வாழை, வேர், தண்டு, இலை இவைகளுடன் அருகம்புல் சம்மாக சேர்த்து அரைத்து கொட்டை பாக்கு அளவு எடுத்து பாலில் கலந்து கொடுக்க இரத்த பேதி குணமாகும்.
- ❖ உடலில் கெட்ட நீர் உள்ளவர்கள் தினசரி பப்பாளிக்காய் சாப்பிட வேண்டும்.
- ❖ கீழாநெல்லி செடியை கழுவி சுத்தம் செய்து அப்படியே மைய அரைத்து மோருடன் கலந்து சாப்பிட்டு வர மஞ்சள் காமாலை இரண்டு நாளில் குணமாகும்.
- ❖ வெற்றிலையுடன் சிறிது ஓமத்தை சேர்த்து அரைத்து அதனுடன் ஒரு ஸ்பூன் தேன் கலந்து குடிக்க வயிற்றுப்போக்கு உடனே நிற்கும்.
- ❖ வாதநாரயண இலையைக் காய வைத்து தூளாக்கி ஐந்து கிராம் தூளை சுடுநீரில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர வாயுத்தொல்லை நீங்கும்.
- ❖ எட்டி மரக்கொழுந்து, மிளகு, பூண்டு இவைகளை நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து தலைக்கு குளித்து வர ஒற்றைத்தலைவலி தீரும்.
- ❖ அதிமதுரம் வில்லை அளவு துண்டு பால் விட்டு அரைத்து தலையில் தடவி 25 நிமிடம் கழித்து வெந்நீரில் 3 வாரம் குளித்து வந்தால் தலைபேன் போகும்.
- ❖ வெங்காயச்சாறு, இஞ்சி ரசம், முருங்கைப்பட்டை சாறு தனித்தோ சேர்த்தோ தினமும் சாப்பிட ஆஸ்துமா கட்டுப்படும்.
- ❖ ஆடாதொடை இலையை தேங்காய் எண்ணெய் விட்டு வதக்கி உத்தடம் கொடுக்க கழுத்துப்பிடிப்பு குணமாகும்.
- ❖ ஆலமரப்பட்டை, வேர்ப்பட்டை 40 கிராம் 2 லிட்டர் தண்ணீரில் போட்டு



ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!

அரை லிட்டராக வற்றும் வரை காய்ச்சி இருவேளை குடித்து வர மேக எரிச்சல், மேகப்புண், வெள்ளைப்படுதல் குணமாகும்.

- உடல் சதை பிடிக்க 3 மாதம் தொடர்ந்து பூசணி சாப்பிடவும். உடல் மெலிய மந்தாரை வேரை நீர் விட்டு பாதியாக காய்ச்சி தொடர்ந்து அருந்தவும்.
- கசகசாவை எருமை தயிரில் அரைத்து இரவு படுக்கப்போகுமுன் தினசரி தடவி வந்தால் முக சுருக்கங்கள் நீங்கி முகம் பளபளப்புடன் ஜொலிக்கும்.
- பிராயன் மரப்பட்டையில் தைலம் செய்து அதில் சுக்கு, கடுக்காய், அரப்பொடி கலந்து பல் தேய்த்து வர பல் நோய் குணமாகும்.
- பச்சை மூங்கில் குச்சியை சிறு துண்டுகளாக வெட்டி நீர் விட்டு மைய அரைத்து செருப்பு கடியின் மீது தடவி வர குணமாகும்.
- கற்றாழை சாறையும் மஞ்சள் தூளையும் அரைத்து விளக்கெண்ணைய் விட்டு சூடு படுத்தி பூசி வர நகசுத்தி குணமாகும்.
- புரசவிதை, வாயுவிளாங்கத்தை பவுடராக்கி நெல்லிக்காய் பவுடர் சேர்த்து தேன் அல்லது வெண்ணெயுடன் சாப்பிட்டு வந்தால் என்றும் இளமையுடன் வாழலாம்.
- நெல்லிக்காய் லேகியம் சிறு உருண்டை காலை மாலை சாப்பிட்டு வர எலும்பு காய்ச்சல் குணமாகும்.
- வசம்பு தூளை தேங்காயெண்ணெயில் சிவக்க கொதிக்க வைத்து வடிகட்டி சிரங்கு மீது தடவி வர சொறி சிரங்கு குணமாகும்.
- வல்லாரை கீரையை பசும்பாலில் அவிய விட்டு உலர்த்தி பொடியாக்கவும். இந்த பொடியை வாரம் ஒருமுறை பால், பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிட்டு வர மலச்சிக்கல் வராது.
- கடுக்காய் வேர், பட்டை, இலை, பூ உலர்த்தி இடித்து சலித்து காலை, மாலை அரை கரண்டி பசும்பாலில் கலந்து சாப்பிட்டு வர தொழுநோய் குணமாகும்.
- நெல்லெண்ணெயில் வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், கற்பூரம் போட்டு காய்ச்சி தினசரி 3 வேளை இரண்டு சொட்டு விட்டு வர காதுவலி குணமாகும்.
- வெற்றிலையை நறுக்கி தேங்காயெண்ணெயில் காய்ச்சி சிவந்தவுடன் இறக்கி ஆற வைத்துக்கொள்ளவும். காலை, மாலை இரண்டு சொட்டு காதில் விட்டு வர காதில் சீழ் வடிதல் நின்று போகும்.
- வெந்தயத்தை வேக வைத்து தேன் விட்டு பிசைந்து கூழாக்கி உட்கொள்ள மார்பு வலி குணமாகும்.
- கண்ணாடித்துண்டால் காயம் ஏற்பட்டால் வாழைப்பழத்தோலை அந்த காயத்தின் மீது வைத்துக்கட்ட ரத்த போக்கு நின்று காயம் விரைவில் ஆறும்.
- பேர்ரத்தை, நிலவேம்பு சம அளவு சேர்த்து அரைத்து நீரில் சுண்ட காய்ச்சி காலை, மாலை குடித்து வர குளிர் காய்ச்சல் குணமாகும்.
- அதிமூத்திரம், நீர்த்தடை, வயிற்று எரிச்சல், உடம்பு குடைச்சல், வாதம், சுவாசக்காசம், கபநோய், இருமல் ஆகியவற்றிற்கு முள்ளங்கி நல்லது.
- முசுமுசுக்கை இலையை வெங்காயத்துடன் நெய் விட்டு வதக்கி பகல் உணவில் சேர்த்து சாப்பிட்டு வர ஆஸ்துமா, மூச்சு திணறல் குணமாகும்.
- மந்தாரை இலையுடன் கொத்தமல்லி, இஞ்சி, உளுந்து, உப்பு, புளி, மிளகாய் சேர்த்து வதக்கி துவையலாக சாப்பிட்டு வர வாந்தி நிற்கும்.
- அரசமரக்கொழுந்து, ஆலமரக்கொழுந்து, அத்திமரக்கொழுந்து மூன்றையும் காய்ச்சி வடிகட்டி சர்க்கரை சேர்த்து சாப்பிட இரத்த மலப்போக்கு நிற்கும்.
- விளாம்பழம் தொடர்ந்து சாப்பிட கல்லீரல் நோய் குணமாகும்.
- வெள்ளரிப்பிஞ்சு இருதய நோய்களை குணப்படுத்தும் தன்மையுடையது.
- பழைய புளி, சுண்ணாம்பு சேர்த்து பிசைந்து தேனீ கொட்டிய இடத்தில் ஒட்டி வைத்தால் வலி குணமாகும்.



எங்கள்
சேவைக்கு
உங்களின்
உதவி தேவை

# விருப்ப சந்தா



தொடர்ந்து வெளிவரும் நமது இதழுக்கு உதவி செய்ய விருப்பமுள்ளவர்கள் **ரூ.10** முதல் தங்கள் வசதிக்கேற்ப விருப்ப சந்தா செலுத்தி எங்கள் பணிக்கு உதவலாம்.

**சந்தா அனுப்புபவர்கள்,**
**கீழ்காணும் ஸ்கேனர் மற்றும்**
**வங்கி எண் வாயிலாக சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM
Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
Paytm | BHIM | BharatPe

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**

# உண்மையே சாட்சிகள் உண்மை ஒன்றே கடவுள்

சுத்தமான மனம் வெண்கலச்சிலை போன்றது. மனிதன் அவ்வப்பொழுது தேவையின் போது ஒரு நல்லோரின் வழியாக மனதைத் திருத்திக் கொள்ள வேண்டும். ஏன் என்றால் நாம் வாழும் உலகத்தில் தவறான எண்ணப்போக்குக்கு இடம் இருக்கிறது. அத் தகைய காட்சியைப் பார்க்கும்பொழுது வெளி உலகத்தால் நம் உள் உலகம் மாறிவிடலாம். பாசி பிடிக்கும் குளத்தைப் போன்று வெளி உலக அழுக்குகள் உள்ளே செல்லாமல் பார்த்துக் கொள்ளுவதே மதம்.

❖ ❖ ❖

எதையும் கண்டு கொள்ளாமல் கர்வ நினைவுடன் வாழுவது சில சமயங்களில் நன்மையைப் பயந்தாலும் பல சமயங்களில் இதுவே நமது தொல்லையாகும். அடுத்து நீ செய்ய வேண்டியது சிந்தனைதான்.

❖ ❖ ❖

ஆணும் பெண்ணும் தன் முன் கண்ணாடியை நிறுத்திப் பார்க் கிறார்கள். அதில் தங்கள் மனதைப் பார்ப்பதில்லை. தங்களையே பார்க்கிறார்கள். கண்ணாடியில் தெரியும் உருவம் நிரந்தரமற்றது. இவ்வுண்மையை அறியும் பொழுது உன்னிடத்தில் தெளிவான சிந்தனை உடனே பிறக்கும்.

❖ ❖ ❖

பெரும்பாலும் நீதிகள் வழங்கப்படுவது உண்மை சாட்சிகளை யும் தனது உள் எண்ணத்தையும் கொண்டே நீதி வழங்கப்படுகிறது. இதற்காக வழக்குரைஞர்கள் தங்கள் கட்சிக்கும் அவர்களின் வாதங்களுக்கும் ஆதரவாக வாதிடுகிறார்கள். எது



எப்படி இருந்தாலும் வழக்குரைஞர்கள் நீதிபதிகள் இவர்களின் தன்மை எப்போதும் பாதி கிணற்றைத் தாண்டியதாகவே எண்ண வேண்டும். கடவுள் ஒருவனே அனைத்தையும் அறிந்த நீதிபதி.

❖ ❖ ❖

கொடுமைப்படுத்துகின்றவன் தனது கடினமனத்தைப் பிறர் மீது செலுத்துகிறான். அதனால் கொடுமைப்படுத்துகிறான். அவன் கொடுமைப் படுத்தப்படும் பொழுதே கொடுமையின் தன்மையை அவனே உணருகிறான். இதுவே கொடுமைத்தன்மையின் விளக்கமாகும்.

❖ ❖ ❖

ஒருவர் நீதி வளாகத்தில் பல சாட்சிகளைப் பார்க்கலாம். அவைகளில் சில மதில் மேல் அமர்ந்த பூனைகளைப் போன்று இருந்து விடுகின்றன. வேறு சில சாட்சிகள் செவியினால் கொண்டதை உரைத்து சாட்சி ஆகிறார்கள். இவ்விரண்டையும் மிகச் செவ்வனே உயர்த்திப் பார்க்க வேண்டும். கட்டாயமாக உண்மைகளே சரியான சாட்சிகள். அதனால் உண்மை ஒன்றே கடவுள்.

❖ ❖ ❖

ஒரு வழக்குரைஞரும் ஒரு நீதிபதியும் மேலே கருப்பு அங்கியை அணிகிறார்கள். எதனால் என்றால் அவர்கள் அமைதிக்கு மத்தியிலே இருக்கிறார்கள் என்பதால்.

❖ ❖ ❖

வாதப் பிரதிவாதங்கள் உண்மையைக் காணப்பயன்படுகின்றன. இரண்டு பக்க வாதங்களும் சிந்தனைக்கு

ஆன்மிகமலர் .காம் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

ஒரு வழியே, அவை முடிவு அல்ல. முடிவு என்பது வழக்கு உண்மை சொல்லுகிறது. சிந்திக்கின்ற வழிமுறை இங்கும் அங்கும் ஊசலாடுகின்ற ஒரு கடிகாரத்தைப் போன்றது. இது எனது அமைதியான எண்ணமாகும். உலகிற்கு இதை வழங்குகிறேன்.

❖ ❖ ❖

ஒவ்வொரு நாளும் நாட்காட்டியின் குறிப்பைக் கிழித்து எறிவது ஒரு தோல்வியே. பயனுள்ள மனிதனாய் வாழ ஒவ்வொரு நிமிடம் உனக்குப் பயன்பட வேண்டும். இதுவே பயனுள்ள நாள்காட்டி.

❖ ❖ ❖

மனிதனின் பரிணாம வளர்ச்சி வேறொன்றுமில்லை. அதை அவனே தன்னிடம் பார்க்கிறான். ஒரு செடி வளருவதைப் போன்றதே பரிணாமவளர்ச்சி, பூமியிலிருந்து சூரியன் என்பது ஒரு எட்டாத பெரிய தூரம், வளருவது அதை எட்டிப்பிடிக்கின்ற தன்மையல்ல. இதை அறிய மண்ணில் முதலில் விதை இடுவதைப் போன்று மனதில் விதை இடு, அது முதல் கட்டம், இரண்டாவது கட்டம் பூமியில் பிறப்பு, மூன்றாவது கட்டம் தெளிந்த சிந்தனை நீரோடைக்குப் போவது, நான்காவது உண்மையைப் பார்த்தல்.

❖ ❖ ❖

பரிணாம வளர்ச்சியின் பட்டியல் என்ன? வளர்ச்சி அடைந்த மனிதனுக்கு பிறருக்கு கீழே உள்ளது தேவைப்படும். முதலில் நீ எதையும் அறிய சிந்திக்க மனதைப் பெறு. இரண்டாவதாய் சலனமற்ற சிறிதும் அசைவிலாத மனதை உள்ளிலும் வெளியிலும் கொள். தலை குளிர்ந்துவிடும் மூன்றாவது கோபம் எல்லாத் துறைகளிலும் போய்விடும். நான்கு வேகமற்ற நிரந்தரதன்மை கிடைக்கும். ஐந்து தெளிவு பிறக்கும். தத்துவமும் கடவுளும் தெரிவான். பிறகே நீ பிறருக்கு வழிகாட்ட முடியும். கடைசியாக உணர்வைப் பெறுவாய். கடைசியில் எப்பொழுதும் கருத்தாயும் நிரந்தரமாயும் உள்ள உலக உண்மையில் இருப்பாய். இந்த பரிணாம வளர்ச்சி என்பது மிக ஆர்வமுள்ள ஒரு வளர்ச்சி ஆகும். அதுவே வாழ்க்கை. அறிவுக் கண்களோடு எதையும் சிந்திக்கின்ற பரந்த உலகம் இவை இரண்டுமே முதல் இரண்டு பரிணாம வளர்ச்சியின் படிகளாகும்.

❖ ❖ ❖

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162182

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
வேல் செல்: 9003199676

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

ஆன்மிகமலர்.காம் இதழில் இணைந்து செயல்பட விரும்புகிறீர்களா?... ஆன்மிகம் சம்பந்தப்பட்ட செய்திகளை எழுத ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் மெயில் புக்




# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க










## aanmeegamalar.com

## இணையதளத்தை பார்க்கவும்












# பிரம்மஹத்தி தோஷம், சித்த சுவாதீன பிரச்சனைகளைத் எளிதாக தீர்க்கும் வில்வாரண்யேஸ்வரர்




அருள்மிகு சௌந்தரநாயகி அம்மன் உடனுறை வில்வாரண்யேஸ்வரர் திருக்கோயில் – திருக் கொள்ளம்புதூர்

**அமைவிடம்:**

கொரடாச்சேரியில் இருந்து 7 கி.மி. தொலைவில் இத்தலம் உள்ளது. கும்பகோணத்தில் இருந்து தெற்கே 20 கி.மி. தூரத்தில் இருக்கிறது. கும்ப கோணத்திலிருந்து கொரடாச்சேரி செல்லும் வழியில் செல்லூரில் இறங்கி சுமார் ஒரு கி.மி. சென்று இத்தலத்தை அடையலாம். கோவில் வரை பாதை உள்ளது.

இத்தல இறைவன் சுயம்பு லிங்கமாக அருள் பாலிக்கிறார்.

பிரம்மாதனக்கு ஏற்பட்ட பிரம்மஹத்தி தோஷம் நீங்க வழிபாடு செய்த தலங்களில் இதுவும் ஒன்று.

சித்த சுவாதீனம் உள்ளவர்கள் இங்குள்ள பிரம்ம தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபாடு செய்வது சிறப்பு.

முள்ளியாறு என்றும் அகத்திய காவேரி என்றும் அழைக்கப்படும் ஆறு கோயிலுக்கு மேற்கே ஓடுகிறது.

தேவாரப்பாடல் பெற்ற காவிரி தென்கரைத்தலங் களில் இது 113வது தலம்.

சிவனின் தேவாரப்பாடல் பெற்ற 274 சிவால யங்களில் இது 177 வது தேவாரத்தலம் ஆகும்.

**இறைவர் திருப்பெயர்:** வில்வாரண்யேஸ்வரர், வில்வவனநாதர், **இறைவியார் திருப்பெயர்:** சௌந்தரநாயகி, அழகு நாச்சியார்,

**வழிபட்டோர்:** விநாயகர், கங்கை, காவிரி, ஆதி





சேடன், இடைக்காடர், அருச்சுனன்,வரகுண பாண்டியன், கோச்செங்கட்சோழன், பிருகு முனிவர், காசிபர், கண்வர், அகத்தியர், வசிட்டர், வாமதேவர்.

**தலவரலாறு:**

பல சிவத்தலங்களை தரிசித்து பாடி வந்த ஞானசம்பந்தர், இத்தலம் வரும் போது வழியில் உள்ள வெட்டாறில் வெள்ளம் ஏற்பட்டது. இதனால் ஓடம் ஓட்டுபவர்களால் ஓடம் செலுத்த முடியாமல் ஆற்றின் கரையிலேயே ஓடத்தை விட்டு சென்றனர். ஆனால் சிவனை தரிசிக்காமல் செல்ல கூடாது என்பதில் தீவிரமாக இருந்தார் சம்பந்தர்.

எனவே ஆற்றின் கரையில் இருந்த ஓடம் ஒன்றை அவிழ்க்க செய்து அதன் மீது தன் அடியவர்களுடன் ஏறினார். தமது நாவையே ஓடக்கோலாக கொண்டு,

"கொட்டமே கமழும் கொள்ளம்பூதூர்
நட்டமாடிய நம்பனை யுள்கச் செல்வுந்துக
சிந்தை யார்தொழ நல்கு மாறரு ணம்பனே'

எனும் திருப்பதிகம் பாடினார்.

இறைவனின் திருவருளால் ஓடம் ஆற்றின் மறுகரையை அடைந்தது. திருஞான சம்பந்தர் கோயிலை அடைந்து மீதி பதிகங்ளை பாடி இறைவனை வழிபட்டு, அங்கேயே தங்கினார் என்பது வரலாறு.

இந்த ஓடத்திருவிழா ஆண்டு தோறும் ஐப்பசி அமாவாசைக்கு மறுநாள் சிறப்பாக நடக்கிறது. சித்த சுவாதீனம் உள்ளவர்கள் இங்குள்ள பிரம்ம தீர்த்தத்தில் நீராடி இறைவனை வழிபாடு செய்வது சிறப்பு. ஆற்றின் அக்கரையில் சம்பந்தருக்கு தனி கோவில் ஒன்றும் உள்ளது. இந்த ஆற்றை மக்கள் வழக்கில் ஓடம்போக்கி ஆறு என்று வழங்குகின்றனர்.

இத்தல இறைவன் சுயம்பு லிங்கமாக அருள்பாலிக்கிறார். கோயில் 5 நிலை ராஜ கோபுரத்துடன் கிழக்கு நோக்கி 75 அடி உயரத்தில் 2 பிரகாரங்களுடன் அமைந்துள்ளது.

உள்பிரகாரங்களில் பொய்யாத விநாயகர், வலம்புரிவிநாயகர், முருகன், ஆதிவில்வநாதர், கஜமுக்தீஸ்வரர், பஞ்சலிங்கம், கஜலட்சுமி ஆகிய சன்னதிகள் உள்ளன. பிரம்மா, அகத்தியர், அர்ச்சுனன் ஆகியோர் வழிபாடு செய்துள்ளனர். கோயில் மூன்றாம் குலோத்துங்க சோழன், மூன்றாம் ராஜராஜசோழன் இவர்கள் காலத்தில் கட்டியிருக்க வேண்டும் என கல்வெட்டுகள் கூறுகிறது.

பிரம்மா தனக்கு ஏற்பட்ட பிரம்ம ஹத்தி தோஷம் நீங்க வழிபாடு செய்த தலங் களில் இதுவும் ஒன்று. தலவிருட்சம் வில்வம். கூவி எம் என்பதற்கு வில்வம் என்பது பெயர். கூவிளம் புதூர் என்ற பெயர் மருவி காலப் போக்கில் கொள்ளம்புதூர் ஆனது.

ஒரு முகப்பு வாயிலுடன் கிழக்கு நோக்கி இவ்வாலயம் அமைந்துள்ளது. முகப்பு வாயிலின் மேற்புறத்தே ரிஷபாரூடர், விநாயகர், சுப்பிரமணியர் திருமேனிகள் வண்ணத்தில் சுதையில் அமைக்கப்பட்டுள்ளன. துவார விநாயகர் இருபுறமும் உள்ளார். கோயிலின் முன் பிரம்ம தீர்த்தம் உள்ளது. உள்ளே நுழைந்ததும் விசாலமான முற்றவெளியைக் காணலாம்.

வலதுபுறம் நந்தவனத்தின் மத்தியில் மகாலட்சுமி சந்நிதி உள்ளது. இரண்டாவது வாயிலிலுள்ள கோபுரம் ஐந்து நிலைகளையுடையது. வாயிலின் இருபுறமும் பொய்யாத விநாயகர், தண்டபாணி சந்நிதிகள் தனித்தனிக் கோயில்களாக உள்ளன.



வெளிப்பிராகாரத்தில் சந்நிதிகள் எவையு மில்லை. தெற்கு வெளிப் பிரகாரத்தில் இருந்து 2ம் பிரகாரத்துள் நுழைய ஒரு மூன்று நிலை கோபுரம் உள்ளது. இதன் வழியே உள்ளே நுழைந்தால் நேரே அம்பாள் சந்நிதி உள்ளது.

5 நிலை கோபுர வாயில் வழியே நுழைந்ததும் காணும் மண்டபத்திலுள்ள வலப்பக்க கற்தூணில் சம்பந்தர் ஓடம் ஏறிச் செலுத்தும் சிற்பம் உள்ளதைக் கண்டு மகிழலாம். உள் பிராகாரத்தில் வலம் வரும் போது நால்வர், வலம்புரி விநாயகர், சோமாஸ்கந்தர், கஜமுத்தீசர், முல்லைவனநாதர், சாட்சிநாதர், பாதாளவரதர், மகாலிங்கர், விநாயகர், கங்கையம்மன், தட்சிணாமூர்த்தி, சரஸ்வதி, விசாலாட்சி, சோழமன்னன், அவன் மனைவி ஆகிய சந்நிதிகள் உள்ளன.

அடுத்தாற் போல ஆறுமுக சுவாமி, மகாலட்சுமி, பைரவர், பள்ளியறை, நவக்கிரகங்கள், சனி பகவான், சூரியன் சந்நிதிகள் உள்ளன. வலம் வந்து தரிசித்து, செப்புக் கவசமிட்ட கொடி மரத்தையும், கொடிமரத்து விநாயகரையும் வணங்கி, மண்டபத்தில் சென்றால் தெற்கு நோக்கிய அம்பாள் சந்நிதி உள்ளது.

சந்நிதிக்கு முன்னால் வெளியில் மண்ட பத்தின் மேற்புறத்தில் பன்னி ரண்டு ராசிகளின் உருவங்கள் உரிய கட்டட அமைப்பில் வடிக்கப் பட்டுள்ளது.



சிவத்திரு.குமரேசன்

அம்பாள் நின்ற திருக்கோலத்தில் தெற்கு நோக்கி அருட்காட்சி தருகிறாள். சந்நிதிகளின் எதிரில் உள்ள தூண்களில் இத்திருக்கோயிலில் திருப்பணியைச் செய்வித்த நகரத்துச் செட்டியார் உருவங்கள் உள்ளன.

துவாரபாலகர்களையும் துவார விநாயகரையும் முருகனையும் தரிசித்து மூலவர் மண்டபத்தை அடையலாம். நேரே மூலவர் தரிசனம். இத்தல இறைவன் சுயம்பு லிங்கமாக அருள்பாலிக்கிறார். கோஷ்டமூர்த்தங்களாக நர்த்தன விநாயகர், தட்சிணாமூர்த்தி, இலிங்கோத்பவர், பிரம்மா, துர்க்கை ஆகியோர் உள்ளனர். சண்டேஸ்வரர் தனி சந்நிதியில் எழுந்தருளியுள்ளார்.

முள்ளியாறு என்றும் அகத்திய காவேரி என்றும் அழைக்கப்படும் ஆறு கோயிலுக்கு மேற்கே ஓடு கிறது. திருஞானசம்பந்தர் பதிகம் பாடி ஓடஞ்செலுத்தியது. துலா மாதத்தில் அமாவாசை உதித்த முதல் மாதத்தில் நீராடி வழிபட்டால் வேண்டும் சித்திகளையும், வலிமை யையும் பெறுவர். இது ஓடம்போக்கி ஆறு என்றும் அழைக்கப்படுகிறது.

– சிவத்திரு.குமரேசன்
இராஜசிம்மன்,
பேராசிரியர் S.I.V.E.T கல்லூரி,
சென்னை, போன்: 919003296221
easanaithedi.in



AVARAIKKAI THIRATTAI KUZHAMBU, BEETROOT PORIYAL
கீதாசமையல்
அவரைக்காய் திரட்டைக் குழம்பு பீட்ரூட் பொரியல்
குழந்தை பெற்ற தாய்மார்களுக்கு வாயு பிரச்சனை தீர்க்கும் உணவு
STRAWBERRY KESARI
கீதாசமையல்
ஸ்டாபெரி கேசரி
பாரம்பரியமான,
சத்தான, சுவையான
சமையல் குறிப்புகளை
மிக எளிமையாகவும்,
தெளிவாகவும் அறிந்து கொள்ள
கீதாசமையல்
(geetha samayal)
youtube சேனலை பாருங்கள்
கீதாசமையல்
THINAI VEGETABLE BRINJ
தினை வெஜிடேபிள் பிரின்ஜ்
geetha samayal வீடியோவை பார்த்து
Like, Share, Subscrib செய்யுங்கள்
You Tube
LIKE & SHARE

# ஆன்மீக வழியில் அமைதி

51

நமது ஞானேந்திரியங்கள் சக்தியை வெளிப்படுத்தி அதன்மூலம் அறிவையும் அனுபவத்தையும் ஆனந்தத்தையும் நமது ஸ்தூல சரீரம் விழிப்புநிலையில் இருந்து பெறுகிறது. ஞானேந்திரியங்கள் விழிப்புநிலையில் இருந்து செயல்படுவதைப்போல் அதன் சக்தியை நாம் கனவு காணும்போது வெளிப்படுத்துவதில்லை. அதாவது ஞானேந்திரியங்கள் சூக்மமாக இருந்து செயல்பட்டு அதன்மூலம் மனம் இன்ப துன்பங்கள் போன்றவற்றை அனுபவவிக்கும். ஆனால் நாம் விழிப்புநிலையில் ஸ்தூல சரீரம் பெறும் அறிவையும் அனுபவங்களை நமது சூக்ம சரீரம்(மனம்) கனவுநிலையில் பெறுவதில்லை.

நமது ஞானேந்திரியங்கள் குறைபாடுகளுடன் இருந்தாலும் நாம் கனவு காணும்போது சூக்மமாக இருந்து அவற்றின் சக்தியை வெளிப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக கண் தெரியாதவனாக இருந்தாலும் அவன் கனவு காணும்போது கனவில் வரும் காட்சிகளை மனிதன் நன்கு பார்த்து மகிழ்வதற்கு முடியும். செவித்திறன் இல்லாதவன் கனவு காணும்போது பறவைகளின் சப்தம், அருவிகளின் சப்தம், இன்னிசை போன்றவற்றை கனவுநிலையில் கேட்க முடியும். ஊமையாக இருப்பவன் கனவில் வரும் மனிதர்களிடம் அவன் சிரித்து பேசி மகிழ்வதற்கு முடியும். நாசி இல்லாதவன்கூட கனவில் காணும் பூக்களின் வாசனைகளை நுகர்வதற்கு முடியும். முடவன் கனவில் நடப்பான் ஓடுவான் குதிப்பான் விளையாடுவான். நாம் கனவு காணும்போது ஞானேந்திரியங்கள் அதன் சக்தியை வெளிப்படுத்துவதுபோல் மனிதர்களுக்கு கனவில் தோன்றும். ஆனால் ஞானேந்திரியங்கள் ஸ்தூல உடலில் இருக்கும்போது அதன் சக்தியை வெளிபடுத்துவதுபோல் கனவு காணும்போது கனவில் வெளிப்படுத்துவதில்லை.

பெரும்பாலும் விழிப்புநிலையில் நமது ஸ்தூல சரீரம் அனுபவவித்த இன்பம் துன்பம் போன்ற அனுபவங்களை, நிகழ்வுகளை நாம் உறங்கும்போது சூக்ம சரீரமாக இருந்து கனவுநிலையில் சில நேரங்களில் அவற்றை மனம் அனுபவவிக்கிறது. நமது ஸ்தூல சரீரம் விழிப்புநிலையில் இருந்து நாம் காணும் காட்சிகள் செயல்பாடுகள் போன்ற அனுபவிக்காதவற்றை நாம் காணும் கனவில் பெரும்பாலும் வருவதில்லை. உறக்கத்தில் இருந்து நமது ஸ்தூல உடல் விழிப்பு நிலைக்கு வரும்போது சூக்ம சரீரம் நம் நினைவில் இருந்து மறைந்து விடுகிறது. எனவே சூக்ம சரீரம்(மனம்) கனவில் கண்ட அனைத்தும் மறைந்து விடுகிறது. அதாவது நாம் கனவுநிலையில் இருந்து விழிப்பு நிலைக்கு வந்து விடுகிறோம்.

நமது ஸ்தூல சரீரம் விழிப்பு நிலையில் இருக்கும்போது நிகழ்ந்த நிகழ்வுகள் காணாத காட்சிகள் ஏதாவது கனவில் வரப்பெற்றால் அவைகள் முற்பிறவியில் நமது ஸ்தூல சரீரம் ஏதோவொருவிதத்தில் அனுபவவித்திருக்கும் என்று வேதாந்தம் அதற்கு விளக்கம் கூறுகிறது. உலகில் கொம்பு முளைத்த மனிதர்கள் இருப்பதில்லை. ஆனால் நமது கனவில் கொம்பு முளைத்த மனிதர்கள் போன்ற வினோதமான காட்சிகள் நிகழ்வுகள் எல்லாம் கனவில் வருகிறதே என்று கேட்கத் தோன்றும். நாம் காணும் உலகில் கொம்பு முளைத்த மனிதர்கள் இருப்பதில்லை. ஆனால் நாம் கொம்பு வைத்த மனிதர்களை திரைப்படங்களில் நாடகங்களில் ஓவியங்களில் நாம் பார்த்திருப்போம் அல்லது கதைகளில் படித்திருப்போம். அத்தகைய பதிவுகள் நம் மனதில் இயல்பாக பதியப்பட்டு கொம்பு முளைத்த மனிதர்கள் போன்றவை நாம் காணும் கனவில் வருகிறது.

பெரும்பாலும் நாம் ஸ்தூல சரீரத்தில் இருக்கும்போது ஞானேந்திரியங்கள் மூலம் அனுபவவித்த அனுபவங்களை நம் மனதில் பதிவுகளாக பதியப்பட்டு விடுகிறது. அவைகள் நாம் உறக்கத்தில் இருக்கும்போது சூக்ம சரீரமாக மாறி மனதில் பதியப்பட்ட அனுபவங்கள் காட்சிகளாக நாம் காணும் கனவின் மூலம் வெளிப்படுத்துகிறது. நாம் இரவில் தூங்கிக்கொண்டு இருக்கும்போது கனவில் சூரிய வெளிச்சத்தில் நாம் நடப்பதுபோல் தோன்றுகிறது. வானில் பறப்பதுபோல் மலையின் உச்சியில் இருந்து குதிப்பதுபோல் போன்ற வினோதமான காட்சிகள் எல்லாம் கனவில் வந்து நம்மை வேறொரு உலகத்தில் சஞ்சரிக்கும்படியான உணர்வை ஏற்படுத்துகிறது.

ஆழ்ந்த உறக்கம் என்பது ஆனந்தமாக நம்மையும் அறியாமல், அறியாமையுடன் அனுபவவிக்கிறோம். ஒரு மனிதன் உறக்கத்தில் ஆனந்தமாக இருந்தேன் என்று மற்றவர்களிடம் அறியாமையில் கூறுவதாகும்.

மனிதன் தன்னையும் அறியாமல் உறக்கத்தில் கனவுகள் இல்லாமல் ஆனந்தத்தை எங்கு எப்போது அமைதியாக அனுபவவிக்கிறானோ அதுவே மனிதனுடைய ஆழ்ந்த உறக்கம் ஆகும். அதாவது மனிதன் கனவுநிலை போன்ற எவ்வித உணர்வுகளும் இல்லாமல் தன்னையும் அறியாமல் உறக்கத்தில் ஆனந்தமாக இருக்கிறானோ அதனையே அவனது ஆழ்ந்த உறக்கம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

பொதுவாக நமது மனம் மற்றும் ஞானேந் திரியங்களும் காரண சரீரத்தில் ஒடுங்கி விடுவ தை ஆழ்ந்த உறக்கம் என்று கூறலாம். நாம் காரண சரீரத்தில் இருந்து விடுபடும்போது சூக்ம சரீரமாக மாறி விடுகிறோம். சூக்ம சரீரத்தி லிருந்து விடுபடும்போது ஸ்தூல சரீரத்திற்கு வந்து விடுகிறோம். அதாவது நாம் உறக்கத்தில் கனவு நிலைக்கு மாறி, கனவிலிருந்து விடுபட்டு நாம் விழித்துக்கொண்டு ஸ்தூல உடலுக்கு வந்து விடுகிறோம்.

நாம் ஸ்தூல சரீரத்தில் அபிமானம் வைத்திருந் தால் மட்டும் விழிப்புநிலையில் இருக்க முடியும். சூக்ம சரீரத்தில் அபிமானம் வைத்திருந்தால் மட்டும் கனவுநிலையில் இருக்க முடியும். காரண சரீரத்தில் அபிமானம் இருக்கும்போது மட்டும் ஆழ்ந்த உறக்கநிலையில் இருக்க முடியும் என்று மூன்று அவஸ்தைகளைப் பற்றி சாஸ்திரம் விளக்கிக் கூறுகிறது. உறக்கத்தில் தன்னை மறந்த நிலையில் மிகவும் ஆனந்தமாக மூன்று சரீரங்களையும், மூன்று அவஸ்தைகளையும் மறந்தநிலையைத்தான் ஆழ்ந்த உறக்கம் என்று சாஸ்திரம் கூறுகிறது.

நமது மனம் மூன்று நிலைகளில் செயல் படுகிறது என்று சாஸ்திரம் கூறுகிறது. நமது மனம் ஞானேந்திரியங்கள் மூலம் வெளியில் உள்ள விசயங்களைக் கிரகிக்கிறது.அவ்வாறு கிரகிப்பது மூலம் நமது மனம் பலவிதமான அனுபவங்களைப் பெறுகிறது மற்றும் வேறு உலகத்திற்கும் அவற்றை மனம் எடுத்துச் செல்கிறது என்று சாஸ்திரம் கூறுகிறது.

நமது ஸ்தூல சரீரம் விழிப்பு நிலையில் ஞானேந்திரியங்கள் மூலம் சக்தியை வெளிப்படுத்தி அறிவு, அனுபவம் மற்றும் ஆனந்தம் போன்றவற்றை பெறுகிறது. நமது ஸ்தூல சரீரம் விழிப்புநிலையில் இருக்கும் போது ஞானேந்திரியங்கள் அதன் சக்தியை வெளிப்படுத்திக் கொண்டிருப்பதைப்போல் சூக்ம சரீரம் கனவுநிலையில் இருக்கும்போது அதன் சக்தியை வெளிப்படுத்துவதில்லை. அதாவது ஞானேந்திரியங்கள் சூக்மமாக இருந்து செயல்பட்டு மனம் இன்பம் துன்பம் போன்றவற்றை அனுபவவிக் கும். விழிப்புநிலையில் ஸ்தூல சரீரம்


• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

பெறும் அறிவு, அனுபவங்கள், ஆனந்தம் போன்றவற்றை சூக்ம சரீரம் கனவுநிலையில் பெறுவதில்லை.

கண் காது போன்ற மனிதனுடைய ஞானேந்திரியங்கள் குறைபாடுகளுடன் இருந்தாலும் கனவு நிலையில் அதன் சக்தியை சூக்மமாக வெளிபடுத்தும். எடுத்துக் காட்டாக மனிதன் கனவுநிலையில் இருக்கும்போது அவன் கண் தெரியாதவனாக இருந்தாலும் அவன் காணும் கனவில் காட்சிகளை பார்க்க முடியும். காது கேளாதவனாக இருந்தாலும் பறவைகளின் சப்தம், அருவிகளின் சப்தம், இன்னிசை போன்றவற்றை கனவு காணும்போது அவனால் கேட்க முடியும். அவன் ஊமையாக இருந்தாலும் கனவில் காணும் மனிதர்களிடம் அவன் சிரித்துப் பேசி மகிழ்வதற்கு முடியும். முடவனாக இருந்தாலும் அவன் கனவில் நடப்பான் ஒடுவான் குதிப்பான் விளையாடுவான். நாம் கனவு காணும்போது நமது ஞானேந்திரியங்கள் அதன் சக்தியை வெளிப்படுத்துவதுபோல் நமக்குத் தோன்றும். ஆனால் ஞானேந்திரியங்கள் அதன் சக்தியை கனவில் வெளிப்படுத்துவதில்லை.

பெரும்பாலும் விழிப்புநிலையில் நமது ஸ்தூல சரீரம் அனுபவவித்த இன்பம் துன்பம் போன்ற அனுபவங்கள் நிகழ்வுகள் போன்றவை மனதில் பதியப்பட்டு விடுகிறது. அதனை சூக்ம சரீரமாக இருந்து நாம் கனவு காணும்போது அவற்றை கனவில் வெளிபடுத்தி மனம் அனுபவவிக்கிறது. ஸ்தூல சரீரம் விழிப்புநிலையில் இருக்கும்போது அனுபவிக்காத காட்சிகள் நிகழ்வுகள் செயல்பாடுகள் போன்றவை எதுவும் நாம் கனவு காணும்போது பெரும்பாலும் வருவதில்லை. நமது ஸ்தூல உடல் விழிப்பு நிலைக்கு வரும்போது சூக்ம உடல் நம் நினைவில் இருந்து மறைந்து விடுகிறது. எனவே சூக்ம சரீரம் கனவில் கண்ட அனைத்துக் காட்சிகளும் நிகழ்வுகளும் மறைந்து விடுகிறது. அதாவது நாம் கனவுநிலையில் இருந்து விழிப்பு நிலைக்கு வந்து விடுகிறோம். சில நேரங்களில் நாம் கண்ட கனவுகள்கூட மறந்து விடுகிறது.

ஸ்தூல சரீரம் விழிப்பு நிலையில்இருக்கும் போது காணாத காட்சிகள் நிகழ்வுகள், செயல் பாடுகள் எல்லாம் நாம் கனவு காணும்போது சில நேரங்களில் வரலாம். அவ்வாறு வரப்பெற்றால் அவைகள் முற்பிறவியில் நமது ஸ்தூல



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

சரீரம் அனுபவவித்திருக்கும் என்று வேதாந்தம் அதற்கு விளக்கம் கூறுகிறது. உலகில் கொம்பு முளைத்த மனிதர்கள் இருப்பதில்லை. ஆனால் நமது கனவில் கொம்பு முளைத்த மனிதர்கள் போன்ற வினோதமான காட்சிகள் கனவில் வருகிறதே என்று கேட்கத் தோன்றும். கொம்பு உள்ள மனிதர்கள் உலகில் இருப்பதில்லை. ஆனால் நாம் கொம்பு முளைத்த மனிதர்களை திரைப்படங்களில் நாடகங்களில் ஓவியங்களில் அல்லது கதைகளில் படித்திருப்போம். அத்தகைய பதிவுகள் நம் மனதில் பதியப்பட்டு கொம்பு முளைத்த மனிதர்கள் நாம் காணும் கனவில் வருகிறது.

பெரும்பாலும் நாம் ஸ்தூல சரீரத்தில் இருக்கும்போது ஞானேந்திரியங்கள் மூலம் அனுபவவித்த அனுபவங்களை மனதில் பதிவுகளாக பதியப்பட்டு விடுகிறது. அவைகள் கனவுநிலையில் சூக்ம சரீரமாக மாறி மனதில் ஏற்கனவே பதியப்பட்டிருந்த அனுபவங்கள், நிகழ்வுகள் போன்ற காட்சிகளாக கனவில் வெளிப்படுத்துகிறது. நாம் இரவில் தூங்கிக்கொண்டு இருக்கும்போது கனவில் சூரிய வெளிச்சத்தில் நடப்பதுபோல் தோன்றுகிறது. இதேபோன்று வினோதமான காட்சிகள் எல்லாம் கனவில் வந்து நம்மை வேறொரு உலகத்தில் சஞ்சரிக்கும்படியான உணர்வை ஏற்படுத்துகிறது.

ஆழ்ந்த உறக்கம் என்பது ஆனந்தமாக நம்மையும் அறியாமல் அறியாமையுடன் கனவுகள் இல்லாமல் உறங்குவது ஆகும். மனிதன் ‘உறக்கத்தில் நான் ஆனந்தமாக இருந்தேன்' என்று அறியாமையில் கூறுவதாகும். நாம் நம்மையும் அறியாமல் நாம் ஆனந்தத்தை எப்போது எங்கு அமைதியாக அனுபவவித்துக் கொண்டிருக்கிறமோ அதுவே ஆழ்ந்த உறக்கம் ஆகும். மனிதன் உறக்கத்தில் எவ்வித உணர்வுகளுமின்றி கனவுகளற்று தன்னை மறந்து அறியாமையுடன் ஆனந்தமாக இருக்கிறானோ அதனையே ஆழ்ந்த உறக்கம் என்று சாஸ்திரம் கூறுகிறது. .

– அமைதி தொடரும்

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# விருப்ப சந்தா செலுத்த விரும்பும் வாசகர்கள்...










விருப்ப
**சந்தா**

**UPI & வங்கி எண்**
**வாயிலாகவும்**
**சந்தா செலுத்தலாம்**

बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda

BHIM Baroda Pay
SCAN TO PAY
WITH ANY BHIM UPI APP
Merchant Name : AANMEEGA MALAR TRUST

UPI
Paytm | BHIM | BharatPe

**AANMEEGA MALAR TRUST**
**ACCOUNT NO. 49510100003648**
**IFSC CODE: BARB0KODAMB**
**(FIFTH CHARACTER IS ZORO)**
**BANK OF BARODA (KODAMBAKKAM BRANCH)**